THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 20th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

TAMIL TRANSLATION FOR "MINOR IRRIGATION."

MR. SPEAKER : Yesterday, when Question No. 317 by Sri P. G. Manickam was being answered, the hon. Member, Sri Vedarathnam, raised a point stating that the Tamil translation for the word "minor irrigation", as found in the Tamil copy of the list of questions, did not read well. The hon. Member, Sri Manickam, has given notice of his question in Tamil and the words used by that hon. Member were used while printing the question list in Tamil. Of course, on a perusal of the Glossary of Administrative Terms prepared by the Government, I find that the correct term for "minor irrigation" is given as "சிறிய நீர்ப்பாசனம்". I must thank the hon. Member for pointing this out to me, and I may assure him and the House that in future the terms used in the Glossary will, as far as practicable, be used.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Short Notice Question Nos. 14 and 15 will be taken up together.

Madura Mills

14 *S.N.Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Madura Mills is facing a crisis;

(*b*) if so, the nature of the crisis; and

(*c*) what steps the Government propose to take to avert a closure of this mill and the consequent unemployment?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) On 14th July 1958 the management of Madura Mills put up a notice informing the workers that at any time after 21 days from that date, changes in the conditions of service of workers would be introduced as a measure to lessen the cost of production of yarn and that changes would take the form of—

(1) cut in dearness allowance by 33-1/3 per cent, and

(2) restriction of production through reduction of working hours from 8 to 6 in one or more of their units and payment of wages and appropriate dearness allowance on a proportionate basis.

The reasons given by the management for taking these steps are heavy accumulation of stocks, slump in trade, higher cost of production, etc., and consequential crisis they were facing.

The workers objected to the changes proposed by the management.

The Government held discussions with the parties at Madurai on 22nd July 1958 and at Madras on 12th and 13th August 1958. The management agreed to defer their proposal for a month and to have, in the meanwhile, direct negotiations with representatives of labour in the matter. The Government have enquired of the management of further developments.

15 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any conciliation took place in the industrial dispute between the workers and the management of the Madurai Mills;

(*b*) what are the points on which the dispute has been raised; and

(*c*) what action has been taken by the Government to settle the dispute?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) The attention of the hon. Member is invited to my answer to Short Notice Question No. 14 by Sri K. Sattanatha Karayalar.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது ஏற்றுமதிக்கும் அனுமதி கொடுத்திருப்பதினாலே, இனியும் தொடர்ந்து அந்த நெருக்கடி மில்லில் நீடிக்கிறது என்று கருதுகிறார்களா ? மில் நிர்வாகஸ்தர் கூறும் விவரங்களில் உண்மை இருக்கிறதா என்று பரிசீலனை செய்தார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் சர்க்கார் தீர்ப்பு கூறவேண்டிய நிலைமை கிடையாது. மில் முதலாளிகள் இன்னும் நெருக்கடி இருக்கிறது என்று தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் நேரடியான பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஏதாவது முடிவு காணும்படியாக அவர்கள் இருவரையும் சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether this crisis has arisen due to the failure of the management to carry out any matter which they have agreed to implement?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir; it is because of certain peculiar conditions of the Madura Mills.

SRI P. S. CHINNADORAI : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாலைத் தொழில் சம்பந்தப்பட்ட சம்பள நிர்ணய போர்டு பஞ்சப் படியை உயர்த்த வேண்டுமா என்பதைப்பற்றி ஆலோசித்து வருகிற நேரத்தில், பஞ்சப் படியைக் குறைத்திருப்பதாக நோட்டீஸ் போட்டிருப்பது சம்பள நிர்ணய போர்டாருடைய விசாரணையை பங்கப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டதா ? அப்படியானால், அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

20th September 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : *மில் நிர்வாகஸ்தர்கள் தங்களுக்குக் கட்டுபடியாகவில்லை என்று சொல்லி, பஞ்சப் படியைக் குறைக்கவேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் சொன்னதுபோல் இண்டஸ்ட்ரீஸ் அவார்டு ஆனதால், அதை அவர்கள் மாத்திரம் தனியாகக் குறைக்க முடியாது என்று சர்க்கார் அவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது.*

SRI A. A. RASHEED : May I know what those certain peculiar conditions are that exist in the Madura Mills and which the Hon. Minister has referred to just now?

THE HON. SRI R. VENKATARAMAN : Their machinery is old. Their cost of production is higher. Their business methods are all old ones. They continue to have buying agents, selling agents and commission agents. Therefore, their cost of production is higher.

SRI N. K. PALANISAMI : *எற்கெனவே 1956-ம் வருஷத்தில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு விரோதமாகக் குறைக்கச் செய்வதினால், இம்மாதிரி குறைத்தால் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் சட்டத்தின்படி மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, மில்லை சர்க்காரே எடுத்துக்கொள்வதற்கான சிபார்சு செய்வோம் என்று மானேஜ்மெண்டாரிடம் சொன்னார்களா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *கட்டுபடியாகாத மில்கள் எல்லாவற்றையும் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் சட்டப் பிரகாரம் சர்க்கார் எடுத்து நடத்தினால் மேன்மேலும் ஷேர்-ஹோல்டர்களுக்கு நஷ்டந்தான் வரும். ஆனால், கட்டுபடியாகாத மில்களைப் பொறுத்தவரை, எப்படியாவது தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒப்பந்தம் செய்துகொள்வது நல்லது.*

SRI M. JAGANNATHAN : The Hon. Minister has stated that the management have adduced reasons for the increase in the cost of production. May I know whether the Government have investigated the reasons adduced by the management for the increase ine the cost of production?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I want to make clear what the responsibility of the Government in these matters is. In the first place, when the management come and state that certain conditions exist in their industry, generally the Government do not immediately come to any decision or give their findings on the matter. We all ow the parties to discuss among themselves and arrive at some sort of settlement. But if no settlement is arrived at, then the Government cause investigation to be made either by a Committee or by a Tribunal. We suggested some alternative methods, viz., the appointment of an Expert Committee to look into the working of the mills and to suggest arbitration or adjudication. The suggestions were not acceptable and, therefore, the Government have no alternative but to refer the matter to adjudication if there is no internal settlement between the parties.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : *தலைவர் அவர்களே, மில் முதலாளிகள் கட்டுபடியில்லையென்று சொல்லி மில்லை மூடக்கூடிய இந்நிலைமையில் தொழிலாளிகளின் நலனை உத்தேசித்தும், முதலாளிகளின் நலனை உத்தேசித்தும் இரு சாராரையும் கூட்டி சமரசம் செய்வதற்குள்ள முயற்சிகள் ஏதேனும் அரசாங்கம் எடுத்திருக்கிறார்களா ?*

[20th September 1958

THE HON SRI R. VENKATARAMAN : மூன்று, நான்கு முறை கூடி அவர்களுடன் விவாதம் செய்திருக்கிறோம்.

SRI V. K. KOTHANDARAMAN : தொழிலாளிகளும் முதலாளிகளும் எப்படியாவது ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்று சொல்லக் கூடிய நமது அமைச்சர் அவர்கள், முதலாளிகள் விரும்புவது போல், சம்பளத்தையும் பஞ்சப் படியையும் குறைத்து ஒரு சமரசத்திற்கு வர வேண்டும் என்று விரும்புகிறார்க்ளா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் அட்ஜுடிகேட்டராக வந்தால் பரிசீலனை செய்து ஆலோசனை சொல்லலாம். இன்றைக்கு நான் அமைச்சர் என்ற முறையில் அதற்கு ஆலோசனை கூற முடியாது.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 500 கோடி கஜம் தான் உற்பத்தி செய்வது என்று திட்டம் இருக்கிறது. மில்களில் உற்பத்தி 500 கோடி கஜத்திற்குமேல் போகக்கூடாதென்ற முறையில் டெக்ஸ்டைல் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அதன் அடிப்படையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது சமீபத்திலே அமைத்த என்க்வயரி கமிட்டியானது இனி கடஞகவோ ஸ்பிண்டில்களாகவோ அதிகரிக்க வேண்டாம் என்று சிபார்சு செய்திருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : As admitted by the Hon. Minister some time ago, is it not a fact that there is crisis in the market for finer varieties and this mill produces only finer varieties of yarn? Also is it not a fact that prices have gone up only in respect of finer varieties and if so, what is the special cause for the crisis in this mill.

THE HON. SRI R. VENKATARAMAN : That has got to be investigated. It is true that there is no crisis in respect of finer varieties. This mill produces coarse varieties also. Their difficulty is that the cost of production of coarse varieties is very much higher.

Wind-power

* 349 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have under consideration any proposal to start wind research with a view to use wind-power for agricultural purposes; and

(*b*) if so, the district selected for conducting the research and when it would be started?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal to start wind research as such. However, there is a proposal to erect a wind mill and conduct trials with it to assess the suitability of wind mills for agricultural purposes under the existing wind conditions.

(*b*) It has been provisionally proposed to install the trial wind-mill in Ramanathapuram district. The work will start after a suitable site is selected.

20th September 1958]

SRI M. KALYANASUNDARAM : ராமநாதபுரம் ஜில்லாவில் வருடம் பூராவுமே நிரந்தரமாக 6 மைல் வேகத்தில் காற்று வீசிக்கொண் டிருப்பதால், அந்த ஜில்லா இந்த ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் என்றும், மின்சாரம் இல்லாமலே காற்றின் உதவியைக் கொண்டு பம்பு ஸெட்டுகளை இயக்குவதற்குரிய வாய்ப்பு அங்கே இருக்கிறது என்றும் சர்க்காருக்கு அறிக்கைகள் வந்திருக்கின்றனவா ? - அப்படியானால், அவைகள் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருக்குக் கிடைத் திருக்கும் 'மெடியொராலாஜிகல்' தகவலிலிருந்து, ராமநாதபுரம் ஜில்லா இந்த ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் என்று தான் தெரிகிறது. ஆகவே, ராமநாதபுரம் ஜில்லாவில் இந்த ஆராய்ச்சியை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ராமநாதபுரம் ஜில்லாவில் எந்த இடம் இதற்கு மிகவும் தகுதியான இடம் என்பதைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கு ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறோம். அந்தக் கமிட்டியில், (1) Director, Regional Meteorological Centre, Madras, (2) Agricultural Meteorologist, Coimbatore : and (3) Agricultural Engineer ஆகிய மூன்று பேரும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் இந்த ஜில்லாவைச் சுற்றிப் பார்த்துத் தகுதியான இடத்தைத் தெரிந்தெடுப் பார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் இதர ஜில்லாக் களில் 'விண்ட் மில்'-கள் இல்லையா ? குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் விண்ட் மில் இல்லையா ? அங்கே விண்ட் மில் இருந்தால் அது எப்படி உபயோகிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விண்ட் மில்களினால் நாம் அடையக்கூடிய பலன்களை அனுபவபூர்வமாகக் கண்டறிவதற்காக அவைகளில் ஆராய்ச்சி நடத்தப்படத்தக்க விண்ட் மில்கள் இல்லை.

SRI N. K. PALANISAMI : விண்ட் மில்களில் ஆராய்ச்சி நடத்து வதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சி நடத்து வதற்குத் தகுந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சொல்வதற்கான கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறோம். அக்கமிட்டி அதற்கு முயற்சி செய்துகொண் டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, is it not a fact that an institution of wind mill for improving the agriculture of our country is an out-moded and archaic method which will not be of any utilitarian value to our country? Why should Government waste money when we are highly developed in electricity?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the Government are not so advanced as the hon. Member thinks.

National Development Council

* 351 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Government was represented at the meeting of the National Development Council held in May 1958 ;

(*b*) whether the question of starting Aluminium and Fertilizer Factories in this State was discussed;

(*c*) whether any decisions have been taken to raise the resources for the plan ; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) The Council did not discuss the specific question of starting aluminium and fertiliser factories in the Madras State; the representatives of the Madras Government, however, suggested in the course of discussion that in the Neyveli Lignite Project, the fertiliser plant and other related parts should all be included within the " core " of the Plan.

(c) & (d) The National Development Council visualised that resources would be raised to finance at least Part A of the Plan involving, an outlay of Rs. 4,500 crores and, so far as possible resources should also be raised to finance some portion at least of Part B of the Plan. The details of resources to be raised during the last two years of the Plan are under consideration of the Planning Commission and the Central and State Governments.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான செலவில் ஒரு பகுதி இந்த மாநிலத்திலிருந்து திரட்டப்பட வேண்டும் என்று கனம் மந்திரி கூறினார். அது எவ்வளவு பணம் என்று கனம் மந்திரி கூறுவாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I could not follow the question properly. But for the next two years we have to fulfil a plan of about 60 to 63 crores and we expect that we will be able to raise resources to the extent of 26·7 crores. We expect to get from the Government of India the balance of about 36 crores.

SRI M. S. SELVARAJAN : தேசீய அபிவிருத்திக் கவுன்சிலில்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தில் 25 சத விகிதத்தைக் குறைத்து, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை செய்யப்பட்டதா ? அப்படிச் செய்வதானால், அது இந்த ராஜ்யத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ராஜ்ய திட்டத்தைப் பொறுத்த வரையில், அதற்காக முதலில் ஒதுக்கப்பட்ட தொகை 152 கோடி ரூபாய். இந்தத் தொகை இப்போது கொஞ்சமும் குறைக்கப்படவில்லை. ஆகையால் இந்த ராஜ்யத்தைப் பொறுத்த திட்டங்கள் அந்த வெட்டினால் பாதிக்கப்படமாட்டா.

SRI A. GOVINDASAMY : நெய்வேலியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் உர உற்பத்தித் தொழிற்சாலையை தனியார் துறைக்கு விடும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ? அல்லது, அதைத் தாங்களே எடுத்து நடத்த சர்க்கார் உத்தேசிக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நெய்வேலியில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் முழுவதும், இணைக்கப்பட்ட திட்டங்கள். எனவே, சர்க்காரே உரத் தொழிற்சாலையை அங்கே நடத்த வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

Agricultural Engineering Work, Chingleput district

* 352 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that the Agricultural Engineering work has been transferred in Chingleput district from the Assistant Agricultural Engineer to the District Agricultural Officer, Saidapet;

20th September 1958]

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether this change-over has made more number of machines idle; and

(*d*) if so, what is the loss in rental revenue to the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) Administrative convenience.

(*c*) No.

(*d*) Does not arise.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, in view of the fact that a large number of machines are lying idle and the ryots do not get any benefit out of these machines, will the Government consider the desirability of transferring them back to the Engineering Section?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that because of the change in the organization no machine is lying idle. This change has been effected in order to relieve the present Assistant Engineer in charge of the stores and also because the Government felt that there must be closer control over these stores. Still this has been done temporarily. Now the tube-well scheme has been taken over by the Agricultural Department and the Government will go into the whole question of reorganization.

Springs

* 353 *Q*.—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மலைச்சாரல்களிலும், விவசாய நிலங்களிலும் ஜல ஊற்றுக்களைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக நிபுணர்களடங்கிய கோஷ்டி ஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறதா?

(ஆ) அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பின், எந்தெந்த இடங்களிலே எத்தனை ஜல ஊற்றுக்கள் இக்கோஷ்டியாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM: இம்மாநிலத்தில் பெரும்பான்மையான விவசாயிகளுடைய நிலங்கள் மழைத் தண்ணீரையே நம்பி இருப்பதால், அவர்களுடைய அந்த நிலங்களில், கிணறுகள் வெட்டுவதற்கேற்றவாறு ஊற்றுகள் உள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் சோதனையை அரசாங்கம் நடத்துமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: தகுதியான இடங்களிலெல்லாம் ஆர்டீஷியன் கிணறுத் திட்டங்களும், "போரிங்" கிணறுத் திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

[20th September 1958

Examinations

* 354 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of secondary schools managed by the Government at present;

(*b*) whether it is a fact that the results in the public examination are poor in Government institutions when compared with those in private institutions; and

(*c*) if so, the action taken by the Government to improve the results?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 38 excluding those in the Kanyakumari district.

(*b*) Any comparison between the two groups of schools in this regard will not be correct. There are Government schools which have scored good results in the last S.S.L.C. Public Examination and there are also private schools where the results have been poor.

(*c*) Usually the explanations of the heads of the schools with poor results in the S.S.L.C. Public Examination are called for and suitable instructions issued to the staff of the schools concerned to see that better results are secured.

SRI K. RAMACHANDRAN : இந்தப் பள்ளிகளில் வேலை பார்க்கும் உபாத்தியாயர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் ஒரே பள்ளியில் வேலை செய்யாததும், அவர்கள் அடிக்கடி பள்ளி விட்டுப் பள்ளி மாற்றப்படுவதும் தான் குறைவான ரிஸல்டுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறதே. அப்படியானால், இனிமேல், ஒவ்வொரு உபாத்தியாயரும் ஒரு பள்ளியில் தொடர்ந்து மூன்று வருஷங்களாவது வேலை பார்த்த பிறகு தான் வேறு பள்ளிக்கு மாற்றப்பட வேண்டுமென்று உத்தரவிட அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மாற்றங்கள் அதிகம் செய்யப்படாமலிருக்க இப்போது ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. சில சமயங்களில், போதிய உபாத்தியாயர்கள் இல்லாததால் சில உபாத்தியாயர் ஸ்தானங்கள் காலியாக இருந்திருக்கின்றன ; ரிஸல்ட் குறைவிற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

SRI T. T. DANIEL : Is it not a fact, Sir, that the results in the Public Examination depend also to some extent on the average standard of the boys studying in the schools and also on the economic and social condition of the parents of the boys?

THE HON. SRI C. SUBRAMANIAM : Generally, Sir, the intellectual attainments of our boys are fairly high. Due to bad equipment in the schools and the bad environment in the class rooms, the boys are not able to come to the expected standard.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know the number of Government Secondary Schools in the Kanyakumari district and also how their results compare with other privately managed schools?

20th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have the figures relating to the Kanyakumari district. A separate question may be put.

SRI M. K. MARIAPPAN : சில இடங்களில், உபாத்தியாயர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் ஒரே பள்ளியில் இருப்பதாலும் ரிஸல்ட் குறை கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : இக்கேள்விக்கு பதில் கிடையாது.

SRI S. RAMALINGA PADAYACHI : சபையின் மேஜையில் வைக்கப்பட்டுள்ள எட்டிலிருந்து, பெண்கள் பள்ளிகளில் எத்தனை சத விகித மாணவிகள் பரீக்ஷயில் தேறியிருக்கிறார்களோ, அதைவிடக் குறைவான சதவிகித மாணவர்களே ஆண்கள் பள்ளிகளில் தேறியிருக் கிறார்கள் என்று தெரிகிறது. ஆண் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது இதற்குக் காரணமாக இருக்குமா ?

MR. SPEAKER : இக்கேள்விக்குப் பதில் கிடையாது.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to change the system and mode of examination in these secondary schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this is a very difficult question not only to answer but also to find a solution. This is under the consideration of the Government of India and also the State Government.

* 355 Q.—M. C. MUTHUKUMARASWAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் அரசாங்கத்தார், முனிசிபல், ஜில்லாபோர்டு, தனியார் (Private aided) முதலியவர்களால் நடத்தப்பட்டு வரும் உயர் நிலைப்பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் 1955–56, 1956–57-ல் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை யில்—

(1) உச்ச ஸ்தானம் (Rank),

(2) கடை ஸ்தானம் பெற்ற பாடசாலைகள் எவை எவை ?

(இ) அதற்கான காரணங்கள் என்ன ?

(ஈ) கடை ஸ்தானம் பெற்ற பாடசாலைகள் நடத்துவோர்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b), (c) & (d) A statement [a] is laid on the table of the House.

Health Assistants

* 356 Q.—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to absorb the post of Health Assistants and Birth and Death Registrars in Government service; and

(b) if so, the scale of pay proposed to be fixed by the Government for them?

---

[a] Printed as Appendix I on pages 398–399 infra.

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

9-20 a.m. SRI M. K. SOMASUNDARAM : சார், ஹெல்த் இன்ஸ்பெக்டர் அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருப்பதால் ஹெல்த் அசிஸ் டென்டுகளேயும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுதான் இல்லையென்று சொன்னேன்.

Aranmanaipudur bridge

* 357 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, தேனியை அடுத்த அரண்மனேப்புதூர் பாலம் கட்ட பொது மக்கள் கொடுத்த பணம் எவ்வளவு ?

(ஆ) அந்தப் பாலம் கட்ட ஆரம்பித்து எவ்வளவு காலமாகிறது ?

(இ) இன்னும் கட்டி முடிக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Rupees 20,000.

(b) & (c) The work was commenced on 6th June 1958. The contractor for the work stopped away after executing a portion of the work. No contractor came forward to execute the balance of work. The work is being executed departmentally through piece workers. The work is likely to be completed by the end of December 1958.

SRI N. R. THIAGARAJAN : பொதுமக்களிடமிருந்து இருபதாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு கட்டுகிரேும், கட்டுகிரேும் என்று சொல்லிக்கொண்டிருந்தால், இனி அவர்கள் அடுத்த காரியத்திற்குப் பணம் கொடுப்பது நின்றுவிடாதா ? ஆகவே பொதுமக்களிடம் இருந்து பணம் வாங்கிவிட்டால் அந்தக் காரியத்தை உடனடியாகச் செய்யும்படியாக அதிகாரிகளுக்கு உத்தரவிடுவார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : உடனடியாகச் செய்ய வேண்டுமென்றுதான் கண்டிராக்ரிடம் விட்டோம். அவன் அந்த வேலையைச் செய்யாத காரணமாக இப்போது சர்க்காரே அதை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Major panchayats

* 358 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எத்தனே மேஜர் பஞ்சாயத்துக்களே இந்த ஆண்டு முனிசிபாலிடியாக ஆக்க உத்திரவிடப்பட்டுள்ளது ?

(ஆ) அவைகளின் பெயர்கள் என்ன ?

(இ) 20,000 ஜனத்தொகையும் ஒரு லட்சத்திற்குமேல் வருமானமுமுள்ள மேஜர் பஞ்சாயத்துக்களே முனிசிபாலிடியாக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) None, Sir.

(b) Does not arise.

(c) Yes, Sir.

20th September 1958]

SRI M. SELVARAJ : தற்சமயம் மேஜர் பஞ்சாயத்துகளுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்து, இருபதாயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையும் இருந்தால் அவற்றை முனிசிபாலிடியாக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது அரசாங்கத்தின் உத்தேசமும் அது தான். இப்போது ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் வந்து, ஜனத்தொகை இருபதாயிரத்திற்கு மேலும் இருந்தால் அவற்றை முனிசிபாலிடியாக மாற்ற ஏற்பாடு செய்து வருகிறோம்.

SRI K. B. S. MANI : ஒரு லட்சத்திற்கு மேல் வருமானமும், 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையும் கொண்ட சீர்காழி பஞ்சாயத்தை முனிசிபாலிடியாக்க வேண்டுமென்று எத்தனையோ முறை கேட்கப்பட்டிருந்தும் அது தவிர்க்கப்பட்டிருக்கிறதே அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போதுதான் அவைகளைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். தவிர்த்துவிட்டதாகத் தெரியவில்லை.

SRI A. GOVINDASAMY : தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள நெல்லிக்குப்பம் முனிஸிபாலிடியை . . . . .

MR. SPEAKER : ஒவ்வொரு முனிஸிபாலிடியாகக் கேட்டுக் கொண்டிருந்தால் பயன் இல்லை.
I do not allow this question. I cannot allow questions about individual municipalities and panchayats. The hon. Member may put a separate question.

SRI M. KALYANASUNDARAM : கேள்வி ஏ-க்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் இல்லை என்று சொன்னார்கள். உத்தரவு பிறப்பிக்காவிட்டால் எந்த எந்த மேஜர் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடியாக்கலாம் என்று ஆலோசனை இருந்து வருகிறதா ? அப்படியானால் அவை எந்த எந்த முனிசிபாலிடி ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது 22 பஞ்சாயத்துக்களை அவ்விதம் ஆக்கலாம் என்று திட்டத்தில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அவற்றின் பெயர்கள் . . .

MR. SPEAKER : The hon. Member must put a separate question.

SRI K. SATTANATHA KARAYALAR : இப்போது மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன வகளை முனிசிபாலிடியாக மாற்ற வேண்டாமென்று கோரி எத்தனை பஞ்சாயத்துகளிடமிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறார்கள் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது கனம் அங்கத்தினருக்குத்தான் நன்றாகத் தெரியும். அவர்கள் தான் இதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு இந்தப் பிரச்சனையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

Block Development meetings

MR. SPEAKER : As the hon. Member who gave notice of the question, namely, Sri B. Doraisami Reddiar, is not in his seat, the answer together with the question will be printed in the official proceedings.

[20th September 1958

* 359 *Q.*—SRI B. DORAISAMI REDDIAR : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஆளும் கட்சியின் பெயரால் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் தவிர மற்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களே Block Development முதலிய கூட்டத்துக்கு தலைமை தாங்கவோ அல்லது கூட்டத்தில் பேச அனுமதிக்கவோ கூடாது என்று சர்க்கார் ஏதாவது உத்திரவு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

Fire services stations, Coimbatore district.

* 360 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவில் நெருப்பணைக்கும் படை நிலையங்கள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ?

(ஆ) 1957–58-ல், இப் படை நிலையங்கள் மூலம் எத்தனை தீ விபத்துக்களுக்கு உதவி கிடைக்கப்பெற்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Six fire stations in the following places :—

(1) Coimbatore;

(2) Dharapuram;

(3) Erode;

(4) Pollachi;

(5) Tiruppur; and

(6) Udumalpet.

(*b*) Number of fire accidents during 1957–58 in the Coimbatore district :—

Year.	Number of fire accidents.
1957	227
1958 (up to 30th June 1958).	127

Prompt and effective help was rendered by the Fire Service Department.

SRI P. G. MANICKAM : முனிசிபல் நகரங்களுக்கு எல்லாம் இந்தத் தீ அணைக்கும் படை விஸ்தரிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்று நான் இதைப்பற்றி அளித்த பதிலில்கூட, இன்னும் சில இடங்களுக்கு அந்த இடத்தின் முக்கியத்துவத்தை முன்னிட்டு பையர் ஸ்டேஷன் வைப்பதற்கு உத்தேசம் உண்டு என்று சொன்னேன்.

Cottage Industries

* 361 *Q.*—SRI D. SUBRAMANIA RAJAKUMAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of cottage industries started in Sivaganga taluk so far under Development Schemes with the places of their location ; and

20th September 1958]

(*b*) the cottage industries, if any, proposed to be started during 1958–59 in Sivaganga taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No cottage industry has been started in Sivaganga taluk nor is any proposed to be started during 1958–59.

Young Convicts

* 362 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலிருக்கும் எந்தெந்த சிறைச்சாலைகளிலே எத்தனை எத்தனை இளங் குற்றவாளிகள் இருக்கிறார்கள் ?

(ஆ) இவர்களுடைய எதிர்கால வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The number of young convicts and the jails in which they are confined are as follows :—

Borstal School, Palayamkottai	445
Central Jail, Salem	87
Central Jail, Cuddalore	46
Central Jail, Coimbatore	229
Central Jail, Madras	160
Central Jail, Tiruchirappalli	164
Central Jail, Madurai	85
Central Jail, Vellore	204
District Jail, Pudukkottai	99
State Jail for Women, Vellore	23

(*b*) In order to enable the convicts to become good citizens and lead a peaceful and industrious life after their release, the following facilities are provided :—

((1) They are given compulsory education up to the elementary stage and are encouraged to appear privately for E.S.L.C. Examination, if they so desire.

(2) They are also given vocational training in any one of the industries that are available in the jail.

(3) They are given compulsory physical training by qualified instructors and are allowed to take part in out-door games.

(4) Their spiritual needs are also met with the help of moral and religious lecturers, who impart lectures to them once a week.

SRI A. A. RASHEED : Among the young convicts, may I know how many are girls, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have given the number as 23. They are confined is the Women's Jail, Vellore.

SRI K. B. S. MANI : இப்போது அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து இளம் குற்றவாளிகளுக்கு கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் நல்ல பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் அதே முறையில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளிவரும் போது அவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதும், தொழில் செய்வதற்குப் பொருள் உதவியும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் இதைவிட்டு வெளியேறும்போது என்ன என்ன உதவி அளிக்கலாம் என்று கவனம் செலுத்த வேண்டுமோ அவ்வளவும் கவனித்துச் செய்யப்படுகிறது.

SRI P. U. SHUNMUGAM : படித்துவிட்டு வெளியேறுகிற இளம் குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உத்தியோகம் கொடுப்பது தரத்தைப் பற்றியது.

SRI A. GOVINDASAMY : இளம் குற்றவாளிகளுக்கு இ.எஸ்.எல்.ஸி. வரையில் படிப்பதற்கு வசதி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எஸ்.எஸ். எல். ஸி. வரையில் படிக்க வசதி செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : படிக்க விரும்பினால் வசதி செய்து கொடுக்க உத்தேசிக்கப்படும்.

SRI M. JAGANNATHAN : Sir, may I know who are these young convicts and whether they are different from juveniles? If they are different, how are they different?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no difference. It all depends on the age-limit that the Act prescribes from time to time.

Rural water-supply

* 363 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount spent district-wise for the Comprehensive Scheme for Rural Water-supply in the State from 1st October 1957 up to 31st March 1958?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : 1957–58-ம் பட்ஜெட் நிதி வருடத்தில் கிராமத் தண்ணீர் சப்ளைக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? செலவழிக்கப்படாமல் கவர்மெண்டுக்குத் திரும்பிவிட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒதுக்கப்பட்டது 36 லட்சம். இங்கே குறிப்பிலே அக்டோபர் 1957-ல் இருந்து மார்ச் 1958 வரைக்கும் 26 லட்சத்து 71 ஆயிரம் செலவழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்குப் பிறகு நான்கைந்து மாதங்களுக்குப் புள்ளிவிவரம் இல்லை. இந்தக் காலத்திலும் பணம் செலவிடப்பட்டிருக்கும். ஆகவே ஏறக்குறைய ஒதுக்கப்பட்ட பணம் செலவாகியிருக்கலாம்.

SRI N. R. THIAGARAJAN : மதுரைக்குச் செலவிடப்பட்ட தொகை மிகக் குறைவு இல்லையா என்பதற்கு " இல்லை " யென்றார்கள். இங்குள்ள ஸ்டேட்மெண்டிலும் இதர இடங்களில் லட்சக்கணக்காகச் செலவிடப்பட்டிருக்கும்போது மதுரைக்கு 53 ஆயிரம் தான் செலவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது நியாயமா ? தர்மமா ?

a Printed as Appendix II on page 400 infra.

20th September 1958]

MR. SPEAKER : நியாயமா, தர்மமா என்று இங்கே கேட்கக்கூடாது.

SRI S. RAMALINGA PADAYACHI : விஞ்ஞான முறையில் சந்திரமண்டலத்திற்கு ஆட்கள் அனுப்பப்படுகிற இந்தக் காலத்திலும் கூட உடையார்பாளையம் தண்ணீர் இல்லாமல் தவிக்கிறதே ? தண்ணீர் சப்ளைக்கு அங்கே ஒரு திட்டம் வகுக்கக்கூடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடையார்பாளையத்தில் தண்ணீர் சப்ளை செய்ய வசதி செய்யப்பட்டிருக்கிறது. இப்போது குறிப்பிட்ட பிரகாரம் அந்த ஜில்லாவிற்கு 3 லட்சத்திற்கு 50 ஆயிரம் செலவாகிறது. மதுரைக்கு 53 ஆயிரம்தான் ஆகியிருக்கிறது.

Mettur Right Bank Canal.

* 364 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தாலூக்காவிலே ஜம்பை கிராமம் வரைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கும் மேட்டூர் வலது கரை வாய்க்காலை ஜம்பை உப-பிரிவிலிருந்து அப்பக்குடல் குளத்து (ஏரி) வரைக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று 1957-ம் வருடம் டிசம்பர் 30-ம் தேதி மேற்படி கிராமத்துக்கு விஜயம் செய்த கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்களிடம் விவசாயிகளால் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின்மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : The Government have carefully examined the request of the petitioners for extending the Mettur Right Bank Canal up to Appakudal, etc., villages. As the contemplated ayacut of 18,000 acres under the Right Bank Canal has already been secured, the question of inclusion of new lands in the ayacut of the canal can be considered only if the secured ayacut cannot be developed fully. It has therefore been decided to watch the development of the ayacut for some more years before considering the question of extending the canal any further.

SRI P. G. MANICKAM : மேற்படி வாய்க்காலானது, ஜம்பை வரைக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜம்பையில் இருந்து கழி வாகிற தண்ணீர் ஆற்றில்தான் போய் கலக்கிறது. ஆகவே, கழிவாகிற தண்ணீரையாவது வாய்க்கால் மூலம் அப்பக்குடலுக்குக் கொண்டு போனால் அது விவசாயிகளுக்கு பயன்படுவதோடு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு அதன் மூலம் தண்ணீர் கிடைக்கும். ஆகவே இந்த அரசாங்கம் அதை மீண்டும் பரிசீலனை செய்யுமா ? 9-30 a.m.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது முடியாது. இரண்டு மூன்று வருடங்கள் பார்த்துத்தான் பரிசீலனை செய்யப்படும்.

Kallakudi temples

* 365 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether trustees have been appointed for the Kallakudi village deities in Lalgudi taluk, Tiruchirappalli district;

(*b*) how long the office had been kept vacant;

(*c*) the reasons for not appointing new trustees so far;

(*d*) the reasons for the removal of the old trustee;

(*e*) how soon trustees will be appointed ; and

(*f*) whether any lands belonging to the village deities were exchanged by the Hindu Religious and Charitable Endowments Department during the period when no trustees were in office and the affairs were in the management of the Executive Officer?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) An Executive Officer has been appointed as trustee.

(*b*) It was never kept vacant.

(*c*) As the village is a factious one and as the management by the previous *de facto* trustee was not satisfactory, local persons have not been appointed as trustees.

(*d*) Vide answer to clause (*c*).

(*e*) The Executive Officer of Sri Alandurayar, etc., temples, Keelapalur, has been appointed as trustee for a period of 5 years from 15th October 1957. The question of appointment of a local man as trustee will arise only if such appointment will ensure the smooth administration of the temples.

(*f*) No.

SRI A. GOVINDASAMY : ஒரு சர்க்கார் அதிகாரியை எப்படி ட்ரஸ்டியாக நியமிக்கலாம்? அந்த கிராமத்திலிருந்து அதற்கு ஒரு ஆள் கிடைக்கவில்லை என்றால் அடுத்த கிராமத்திலுள்ள ஒருவரையாவது ட்ரஸ்டியாக நியமிக்க என்ன கஷ்டமிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோவில்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்துள்ள வருமானம் வருடத்திற்கு 600 ரூபாய்தான். அங்கு ஐந்தாறு கோவில்கள் இருக்கின்றன. அங்கு கட்சிகளும் இருக்கின்றன அந்த ஊரில் உள்ள ஒருவரையே டிரஸ்டியாக நியமிக்க முடியவில்லை என்றால் இன்னொரு ஊரில் இருந்து ஒரு டிரஸ்டியைக் கொண்டு வந்தால் தகராறுதான் வரும். ஆகவே எக்ஸ்ஸிக்யூட்டிவ் அதிகாரி டிரஸ்டியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதில் தவறு ஒன்றுமில்லை.

SRI S. LAZAR : எப்படியும் இடம் காலியாக வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். பெர்மனன்ட் டிரஸ்டி நீக்கப் பட்ட பிறகு என் டௌமென்ட் டிப்பார்ட்மென்டிலுள்ள ஒரு உத்தியோகஸ்தர் ஏதாவது கண்காணித்து வந்தாரா? அப்பொழுது இந்த அதிகாரி டிரஸ்டியாக இருந்தாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த நியமனங்கள் ஏரியா கமிட்டியினால் நியமிக்கப்படுவதாகும். முன்பிருந்த டிரஸ்டி "என்னால் இதைப் பார்க்கமுடியவில்லை" என்றும், "எனது வேலை கெட்டுப்போகிறது" என்று சொல்லியும் ராஜினாமா செய்து விட்டார். பின்னர் தான் எக்ஸ்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் டிரஸ்டியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

Agricultural Machinery Advisory Committee

*366 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேளாண்மை இயந்திரக் கருவிகள் ஆலோசனைக் கமிட்டி (Agricultural Machinery Advisory Committee) எத்தனை ஆண்டுகளாகப் பணிபுரிந்துவருகிறது?

(ஆ) இதன் உறுப்பினர் யாவர்?

(இ) இதுவரை அவர்கள் செய்த குறிப்பிடத்தகுந்த வேலை என்ன?

20th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) About 10 years.

(b) The Commissioner of Food Production, Madras; the Director of Agriculture, Madras; the Chief Engineers, Public Works Department (General), Madras; the Principal, Engineering College, Guindy; the Agricultural Engineer, office of the Director of Agriculture, Madras; and one non-official member with experience in agricultural machinery.

(c) The Committee has been advising Government on proposals relating to the purchase of agricultural machinery by the Agricultural Department costing Rs. 10,000 and more with special reference to the technical aspects like suitability, design, horse-power and also cost.

SRI A. VEDARATHNAM: இந்தக் கமிட்டியாரின் ஆலோசனையை அரசாங்கம் எற்றுக் கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொத்தமாக கமிட்டியாரின் ஆலோசனையைக்கேட்பதில்லை. அப்போதைக்கப்போது அரசாங்கம் மெஷின்கள் வாங்கவேண்டியதின் நிமித்தமாகவும், மற்ற சமயங்களிலும் அவர்களின் யோசனைகளை அளிக்கிறார்கள். அதைக் கேட்டுத்தான் அரசாங்கம் நடக்கிறது.

SRI K. R. NALLASIVAM : சிறிய அளவில் ட்ராக்டர்கள் செய்வது பற்றிய யோசனையை இந்த கமிட்டி கொடுத்ததா ? அதாவது, 10 ஹார்ஸ் பவருக்கு குறைவாகவுள்ள ட்ராக்டர்கள் செய்வது பற்றி ஆலோசனை கொடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் இதுபற்றிய தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Pudukkottai Raja's Hospital

MR. SPEAKER : As the hon. Member Sri V. Arunachala Thevar who has given notice of this question is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 367 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the number of doctors in Pudukkottai Raja's Hospital is increased now or decreased after the merger; and

(b) if so, by how many?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The number of doctors now employed in the hospital is five as against eleven before the merger.

Milk colonies

* 368 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to open milk colonies at the outskirts of the Madras City; and

[20th September 1958

(*b*) the action taken by the Government so far to implement the recommendations made in the report of the Lakshmanaswami Mudaliar Committee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. It is proposed to open a cattle colony at Madhavaram, North Madras, on an 600 acre plot for accommodating 4,000 milk animals evacuated from the City.

(*b*) A statement[a] showing the action taken by the Government to implement the recommendations of the Lakshmanaswami Mudaliar Committee is placed on the table of the House.

SRI M. JAGANNATHAN : May I know the estimated cost of the proposed colony at Madhavaram?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, for the year 1958–59, originally a sum of Rs. 46·73 lakhs was provided for. But the Planning Commission cut down the provision to Rs. 25·23 lakhs so far as this year is concerned.

SRI A. GOVINDASAMY : சென்றாண்டு வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்பித்த நேரத்தில் நிதியமைச்சர் அவர்கள், பம்பாயிலுள்ள "ஆரே காலனியை" ப் போல் சென்னையிலும் ஆரம்பிக்கப் படுமென்று சொன்னார்கள். அங்கு 14,000 மாடுகள் இருக்கின்றன. இங்கு 4,000-ம் தான் இருக்கின்றன. அதை உயர்த்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் அவர்களுக்கு தமிழ் நன்கு தெரியும். "போல்" என்றால் அதே நம்பர் என்று அர்த்தமில்லை. இதுவும் ஒரு பெரிய திட்டந்தான். இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு, 123 லட்சத்து சொச்சம் ரூபாய் ஆகிறது. நியூஸிலண்ட் அரசாங்கமும் இதற்கு உதவி செய்ய முடிவு செய்து விட்டார்கள். ஆகவே இது பரியூர்ணமாக நிறைவேற்றப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : When will the first evacuation of these animals start?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is expected that about 500 cattle could be evacuated during the course of this year.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether we are getting any financial assistance under the Colombo Plan and if so, what is the amount and what is the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just now said in Tamil that the Government of New Zealand have decided to give full aid to this scheme.

SRI K. VINAYAKAM : In which year the entire colony will function? By that time, will all the cattle that are now yielding milk in the City be evacuated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The present proposal is not to evacuate all the cattle. The present idea is to evacuate about 2,000 cattle from the City.

---

[a] Printed as Appendix III on pages 401–402 infra.

20th September 1958]

Dairy

* 369 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் ஒரு பால்பண்ணை அமைப்பைப்பற்றி நியூஜிலாந்து பிரதமர் ஸர்-வால்டர் நாஷ்உடன் சென்னை அரசாங்கத்தார் சமீபத்தில் பேச்சுவார்த்தை நடத்தினரா ?

(ஆ) அப்படியானால், அதன் சாராம்சம் என்ன ?

(இ) நியூஜிலாந்திலிருந்து இந்தப் பால்பண்ணைக்கு உதவி கிடைக்குமா ? அவ்விதமானால் எவ்வளவு ?

(ஈ) இப்பால்பண்ணை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Yes, Sir, the New Zealand Government have since approved a grant of £215,000 equivalent to about Rs. 29 lakhs under the Colombo Plan.

(*d*) The scheme is expected to commence in 1959.

Sembalai crop

* 370 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் செம்பாளை நெல் பயிரில் சில வருஷங்களாக பூச்சி அடித்து வருவதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ?

(ஆ) இந்தப் பூச்சியைபற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி ஏதேனும் செய்திருக்கிறார்களா ? அப்படியானால், அதன் முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) It is presumed that the reference is to the samba crop in Tanjore district as "Sembalai" is a semi-dry paddy grown mainly in the South Arcot and Chingleput districts. Efficient pesticides by way of B.H.C., D.D.T. and Folidol and Rodenticides like Zinc-Phosphide are available for controlling pests. These chemicals are stocked in Agricultural Depots and sold to ryots at subsidised rates in areas declared as pest-affected. The control measures taken against the pests are as follows :—

The stem-borer--spraying of Folidol or dusting of BHC 10 per cent.

The Green Jaseld-Dusting of DDT. 5 per cent.

The fulgorld—Dusting of BHC. 10 per cent.

The rice mealy bug-spraying of Folidol.

Field rates-balting with Zinc-Phosphide.

(*b*) Remedial measures against the pests enumerated above have reached a standard as a result of intensive research carried out by special staff stationed at Aduthurai. Further, intensive work on paddy stem-borer is now in progress at the Agricultural Research Station at Aduthurai under the auspices of a special scheme financed by the Indian Council of Agricultural Research.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லா பாசனப் பகுதிகளில் உள்ள இடங்களில் மிகவும் நன்றாக விளைகிற "வெரைட்டி ", இந்த கட்டாம்பாளை என்ற நெல். அவைகளில், இதுவரையிலும் இந்தப் பரீட் சார்த்த முறைகளின் பலனாக அந்தப் பூச்சிகள் கட்டுப்படவில்லை. அதனால் ஏராளமான நஷ்டம் வந்து விவசாயிகள் அந்த வெரைட்டியையே விட்டு விட வேண்டிய நிலை வந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அப்படியானால் அந்தப் பூச்சிகளை கண்ட்ரோல் செய்ய வேறு புதிய முயற்சிகள் ஏதாவது எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி ஆராய்ச்சி மேலும் செய்யப்பட்டுவருகிறது என்று நான் முன்பே சொன்னேன், ஆனால் அடியோடு இவர்கள் இந்தப்பயிரையே மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற விவரம் அரசாங்கத்தினிடம் இல்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMI : இந்தப் பூச்சிகளை அழிப்பது என்பது, மிராசுதார்கள் அரசாங்கத்திற்குத்தெரிவித்த பிறகுதான் அதைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அல்லது அரசாங் கமே அதிகம் உத்தியோகஸ்தர்களைப் போட்டு பூச்சிகள் எங்கு எங்கு அதிகம் இருக்கிறது என்று கண்டுபிடித்து அதற்கு சிகிச்சை செயய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவை, விவசாயிகள் பயிர் செய்கிற நிலம். விவசாயிகள்தான் முதலில் கவனம் எடுத்துக் கொண்டு அதைச் சொல்ல வேண்டியது. அதைச் சொல்லாமல் அவர் களைக் கேட்காமல் அவர்கள் நிலத்தில் ஒன்றும் செய்ய முடியாது.

D.P.M. Course, Bangalore

* 371 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Srimathi T. N. Anandanayaki) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any doctors have been deputed by our Government to undergo D.P.M. Course at Bangalore; and

(*b*) if not, why?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes.

(*b*) Does not arise.

SRI S. LAZAR : I would like to know what is meant by this D.P.M. Course.

THE HON. SRI M. A. MANICKAVELU : Diploma in Psychological Medicine.

Temple lands

*372 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களில் வீடு முதலிய கட்டிடங்கள் கட்டியவர்களை அப்புறப்படுத்தாமலிருக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

20th September 1958]

Sri K. ANBAZHAGAN : கோவில் நிலங்களில் பல வருட காலமாக, மதவேறுபாடு கருதாமல் பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு குடியிருக்க இடம் கொடுத்து வந்ததற்குமாறாக இப்பொழுது வேறு மதங்களைச் சார்ந்தவர்களான முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் ஆகியோர்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சி நடைபெறுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி அரசாங்கத்திடம் தகவல் இல்லை. ஆனால் இந்த விஷயங்களெல்லாம், இருக்கிற சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அதற்கு குறுக்கே நாம் ஒன்றும் செய்ய முடியாது.

Local Development Works

* 373 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount allotted for Gudiyattam taluk under Local Development Works Programme during 1957–58;

(*b*) the date of allotment of the amount;

(*c*) the amount spent up to 31st March 1958; and

(*d*) the amount remaining unspent?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Rs. 98,860.

(*b*) 12th September 1957.

(*c*) Rs. 71,346·54 nP.

(*d*) Rs. 27,513·46 nP.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார். இது போன்று ஒவ்வொரு ஆண்டிலும் நான்கு, ஐந்து மாதங்களுக்குப் பின்னால் பணத்தை ஒதுக்குகின்ற காரணத்தால் அதே ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் முடிக்கவேண்டும் என்று எண்ணி அவசர அவசரமாக இந்த அபிவிருத்தி வேலைகளை செய்வதால், இந்த வேலைகள் நல்ல முறையில் நடப்பதில்லை. அது மட்டுமல்ல, பணமும் மிச்சப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே வருட ஆரம்பத்திலேயே பணத்தை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்று விதி இல்லை. ஒதுக்கின பணத்தைக் கொண்டு இந்த ஆண்டிலும் தொடர்ந்து வேலை நடத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

Price of Petrol

* 374 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the attention of the Union Government has been drawn by the Madras Government to the rise in the prices of petrol and petroleum products such as d· sel oil, tar, motor oil, etc.?

The Hon Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Sri A. A. RASHEED : Is it a fact that oil companies have reduced their prices for petrol and petroleum products and if so, will the Government recommend to the Union Government that the reduction be passed on to the consumers?

[20th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member should have been aware that this question has already been taken up in the Parliament and that there has been a discussion also on that. The Union Minister has also explained the position.

Private School Teachers

*375 *Q.*—SRI N. K. PALANISAMI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தனியார் பாடசாலைகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு உத்தியோக உத்தரவாதம் கொடுக்க அரசாங்கத்தார் எவையேனும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, Adequate provision has been made in the rules relating to elementary schools and in the Madras Educational Rules to safeguard the interests of the teachers employed in Private schools.

SRI N. K. PALANISAMI : ஸார், தனிப்பட்ட பள்ளிக் கூடங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை நீக்குவதற்கும், நியமிப்பதற்கும் அதிகாரம் இந்த தனிப்பட்டவர்களுக்கே இருந்து வருகிறது. இதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால் இந்த பொறுப்பை சர்க்காரே ஏற்றுக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்கள் பள்ளிக் கூடம் நடத்துவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுக்கும்பொழுது அவர்களாகவே அதை நடத்திக்கொள்வதற்கு வேண்டிய சுதந்திரம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு அனுமதியும் கொடுத்துவிட்டு, இம்மாதிரிப்பட்ட அதிகாரங்களை சர்க்காரே வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் அது கஷ்டமாகவேத்தான் முடியும்.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know what are the safeguards?

THE HON. SRI C. SUBRAMANIAM : The terms under which they can be employed are formulated in the rules. A discharge from service can be made only before the completion of probation. If any discharge is made after the completion of probation, the concerned person can complain to the educational authorities and there is also an appeal provided for.

SRI M. S. SELVARAJAN : ஸார், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாச்சாரம் 1:35 என்ற முறையில் மாற்றி புதிய திட்டம் அமைத்திருப்பதால் இதனால் வேலை இழந்திருக்கக்கூடிய ஆசிரியர்களின் தொகை என்ன ? அவர்களுடைய கோரிக்கைகளை கவனிப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதன் காரணமாக வேலை இழப்பதற்கு இடம் கிடையாது. ஏனென்றால் இருக்கின்ற ஆசிரியர்களை நீக்குவதற்கு அதில் இடம் கொடுக்கவில்லை. இருக்கின்ற ஆசிரியர்களை மேலும் வைத்துத்தான் ஆகவேண்டும்.

20th September 1958]

" *After* item (ii) of clause 29, *add* the following :—

' (iii) to the same sub-section, the following proviso shall be added, namely :—

" Provided that the provisions of sections 35 and 36 shall, so far as may be, apply in relation to the composition of agricultural income-tax under this section, as they apply in relation to the assessment of agricultural income-tax under this Act." ' "

The amendment was put and carried.

Clause 29, as amended, was put and carried.

New clause 29-A.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

" *After* clause 29, *add* the following as new clause 29-A :—

29-A. After the commencement of this Act all categories of land tax in force before its commencement shall be substituted by a basic figure of Re. 1 per acre for all lands irrespective of the categories to which they belong.' "

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே

10-40 a.m.] நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கிறேன். இப்பொழுது விவசாய வருமான வரி வரும்போது நில வரியை உடனடியாக மாற்றிஅமைத்தம் அடிப்படை வரியாக விதிக்கவேண்டும் என்பது என்னுடைய திருத்தது. இந்தத் திருத்தத்தின் கொள்கையை ஏற்கெனவே கனம் மந்திரி அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் இதை வைத்துப் பரிசீலனை செய்து பார்த்து விட்டு அதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைப் பார்த்து விட்டு அதன் பிறகு இதைப்பற்றி நிச்சயம் செய்து கொள்ளலாம், என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது ஆட்சி நடத்தும் கட்சி, இந்த அரசாங்கம் ஏற்கெனவே சோஷலிஸ்ட்டிக் பாட்டர்ன் அப் சொசைட்டி அமைக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அரசாங்கத்தை நடத்தவேண்டும் என்று ஏற்கெனவே திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கொள்கையை அமைத்

20th September 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

திருக்கிற அரசாங்கம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு எந்த விதமான கஷ்டமும் இருக்காது. இப்பொழுதுள்ளபடி பெரிய நிலச்சுவாந்தார்களுக்கு வரி விதித்து சிறிய நிலச்சுவாந்தார்களுக்கும் மத்திய தர நிலச்சுவாந்தார்களுக்கும் இந்த வரியை விட்டு விலக்கு அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன். இப்படிப்பட்ட ஒரு முறையைக்கொண்டு வந்திருப்பதனால் பல லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு பெரிய சௌகரியம் ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னுமொரு விஷயத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றையதினம் காலை கேள்வி நேரத்தில் கன்யாகுமரி ஜில்லாவில் திருப்பு வாரம் என்ற வரிக் கொள்கை இருந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த முறைப்படி ஒரு எக்கருக்கு ஒரு வருஷத்திற்கு இவ்வளவு வரி என்று விதிக்கப்பட்டது. அதாவது ஏக்கர் ஒன்றுக்கு 20 முதல் 25 ரூபாய் வரையில் விதிக்கப்பட்டது. அந்த முறையில் நில வரியைக் குறைத்தார்கள். அவ்வாறு குறைக்கும்போது நிலவரி வசூலிப்பதில் ஒரு பாகத்தை அரசாங்கத்திலிருந்து பத்மநாபசாமி கோவிலுக்குத் திருப்பித்தரப்படும். அதனால்தான் அதற்கு திருப்பு வாரம் என்ற பெயர் வந்தது. ஆகவே விவசாயிகள் அடிப்படை வரியைக் கொடுக்கவேண்டும். அப்படி வைத்துக் கொண்டால்தான் அது நியாயத்திற்கு உகந்ததாகும். இதைப்பற்றி பரிசீலிக்க திருவனந்தபுரத்தில் பெரிய அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அந்தக் கமிட்டி இப்படிப்பட்ட வாரம் நியாயம் இல்லை என்று தீர்ப்புக் கூறினார்கள். ஆகவே நம்முடைய நாட்டில் நில வரிக் கொள்கையை மாற்றி அமைத்து நாமினல் அளவில் ஒரு எக்கருக்கு இவ்வளவு போடுவது என்று இருந்தால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மத்திய தர விவசாயிகளுக்கும் பெரிய வசதியாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுக் கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri T. T. Daniel : Sir, I like to point out that at the time 10-45 a.m.
of extending this Act to Kanyakumari as my friend has suggested, the question of "Maniamkaram" has to be deeply and completely analysed. Otherwise it will cause a great deal of confusion to the agriculturists there. I think that the question of recovery of this "Maniamkaram" even at present has created great confusion in the Kanyakumari district. I would be very much thankful to the Hon. Minister if he will place on the table of this House during the course of this session a statement showing what the position of the recovery of "Maniamkaram" is, whether the Kerala officers are entitled to recover this from the ryots in Kanyakumari district and whether any negotiation is going on between the officers of the Kerala Government and this Government regarding the settlement of this question. The Government should also bear in mind what is called "Damodaran Asan Committee Report" approved unanimously by all the parties of the former Travancore-Cochin State and the contentions and decisions arrived at in the Damodaran Asan Committee Report, while settling the Maniamkaram question.

Mr. Speaker : Before we proceed further, I would like the hon. Member Sri Ramaswamy Pillai to let me know why I should not rule this amendment out of order.

Sri T. S. Ramaswamy Pillai : I anticipated this, Sir.

Mr. Speaker : Oh! The hon. Member anticipated it. Now I rule the amendment out of order.

Clause 30.

MR. SPEAKER : The motion is—

" That clause 30 do stand part of the Bill."

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment :—

" In clause 30 of the Bill, for the proviso to Part I of the Schedule, *substitute* the following proviso, namely :—

' Provided that in the case of every company, agricultural income-tax shall be charged at the maximum rate on the whole of the total agricultural income.' "

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In Part I of the Schedule in item I, *for* the figure ' **3,600** ', *substitute* the figure ' 2,500 '."

The amendment was duly seconded.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

" In Part I of the Schedule in item 1 *for* the figure ' 3,600 ', ***substitute*** the figure ' 6,000 ' and in item (2) *for* the figure ' 1,400 ', ***substitute*** the figure ' 2,500 ' and in item (3) *for* the figure ' **5,000** ', ***substitute*** the figure ' 2,500. "

The amendment was duly seconded.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

" In Part II of the Schedule in item I *for* the figure ' $12\frac{1}{2}$ ', *substitute* the figure ' **18** ', in item (2) *for* the figure ' $7\frac{1}{2}$ ', ***substitute*** the figure ' 9 ' and in items (3) to (5) *substitute* the figure ' 15 ' *for* figure ' 10 '."

The amendment was duly seconded.

* **SRI N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, 3,600 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரையில் உயர்த்த முடியாது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்ன காரணம் 1,400 ரூபாயாக முதலில் போடுவதாக இருந்தோம், இப்பொழுது 3,600 ரூபாய்க்குப் போட்டிருக்கிறோம் என்று சொன்ன காரணம் அவ்வளவு சரியாக இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 3,600 ரூபாய் வருமானம் வருகிறது என்றால் அந்த அளவில் 300 ரூபாய் சர்க்காருக்கு வரி கொடுக்கிறார்கள். அதே சமயத்தில் 3,600 ரூபாய் விவசாய வருமானம் வரக்கூடிய காலத்தில் எந்த அளவுக்கு சர்க்காருக்கு வரி கட்டுகிறார்கள் என்று பார்த்தால் அவர்களுடைய கணக்குப் பிரகாரம் தெரியும் 3,600 ரூபாய் வருமானம் வருவதாக இருந்தாலும் அவர்களுக்கு சர்க்காருக்கு 200 ரூபாய் நில வரியாகக் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் வருமான வரி வேறுகட்ட வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் அவர்கள் 50 ரூபாய் வரி செலுத்துவதாக இருந்தாலும் இன்னும் சர் சார்ஜ் கட்டுகிறார்கள். அந்த சர் சார்ஜ் இரண்டணாவாக இருந்தது அப்படியே தான் இருக்கிறது, இன்னும் போகவில்லை. அது போக செஸ் ரூபாய்க்கு ஒரு அணா இருந்தது. இப்பொழுது ஐந்தணாவாக உயர்ந்திருக்கிறது. இன்னும் விலைவாசி வருஷா வருஷம் இறங்கு முகமாகவே இல்லை, ஏறு முகமாகத்தான் இருக்கிறது. அதில் நிரந்தரமான நிலைமை கிடையாது. பண்ணைக்கும் அதிகப்படியாகச் செலவு

20th September 1958] [Sri N. K. Palanisami]

செய்து பயிரிட வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய மழை பெய்வது இல்லை. திடீரென்று மழைபெய்யாமல் போய்விட்டால் எதிர் பார்த்த அளவு வெள்ளாமை இருக்காது. விலைவாசிகள் குறைந்து போனல் அவர்கள் எதிர் பார்த்த அளவில் வருமானம் வராது. இப்படி பல விதங்களில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்றன. அதனல் தான் குறைந்த பட்சம் 5,000 ரூபாயாக உயர்த்தவேண்டும் என்று சொல்லு கிறோம். ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் வருகிறது என்று கணக்குப் போடு கிறார்கள். அது எப்படி இருக்கிறது என்றால் தெனலி ராமன் ஆற்றில் இறங்குவதற்குக் கணக்குப் போட்டது போல்தான் இருக்கிறது. தெனலி ராமன் ஆற்றைக் கடக்க முதலில் ஒரு அடி ஆழம் இருக்கிறது, பிறகு மூன்று அடி ஆழம் இருக்கிறது, நடுவில் ஐந்தடி ஆழம் இருக்கிறது என்று சராசரி கணக்குப் போட்டு ஆற்றில் இறங்கி விடலாம் என்று நினைத்து ஆற்றில் இறங் கியதுபோல் இருக்கிறது சர்க்கார் நில வருமானத்திற்குக் கணக்குப் போடு வதானது. ஒரு ஏக்கருக்கு நிகர லாபம் 300 ரூபாய் என்று போட்டி ருக்கிறார்கள். இப்படி நிகர லாபம் எப்படி கிடைக்கும் என்பதுதான் தெரியவில்லை. இதை கனம் மந்திரி அவர்கள் எப்படி ஒத்துக்கொண்டார் என்பதுதான் தெரியவில்லை. ஆகவேதான் 3,600 ரூபாய் என்று இருப்பதை 5,000 ரூபாய் என்று உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. RAMACHANDRAN: கனம் சபாநாயகர் அவர்களே, இப் பொழுது 3,600 ரூபாய் என்று இருப்பதை 6,000 ரூபாய் என்று அமைத் துக்கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். சாதாரண மாக மத்தியதர விவசாயிகளும், சாதாரண விவசாயிகளும் இதனல் பாதிக் கப்படக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 12½ ஏக்கர் ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து கொஞ்சம்கூட அதிகப்படுத்தப்படாத காரணத்தால் வருமான அடிப்படையிலாவது ஓரளவு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும், அந்த முறையில் செய்ய வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இத்துடன் வருமான வரி சம்பந்தமாக மற்றவர்கள் கட்டக்கூடிய வருமான வரி 3,600 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடியவர்கள் தான் கட்டுகிறார்கள். விவசாயிகள் ஏற்கெனவே நில வரி வேறு கட்டு கிறார்கள். அதனல் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட வரியைப் போடுவதால் அவர்களுக்கு அதிகப்படியாக அபராதம் போடுவதாக இருக்கிறது. இந்த முறையில் இருப்பதால் இது கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுது 3,600 ரூபாய் என்று இருப்பதை 6,000 ரூபாய் என்று அமைத்துக்கொள்ள வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். 3,600-க்கு மேல் சற்று அதிகமாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக 5,000 ரூபாய் வருமானம் வரக் கூடியதாக இருந்தால் 3,600 போக 1,400 ரூபாய் ஆகிறது, அதற்கு கிட்டத்தட்ட 75 ரூபாய் வருமான வரி கட்ட வேண்டியதாக இருக்கும். ஆகவே 200 முதற்கொண்டு 250 ரூபாய் வரையில் வரி செலுத்த வேண்டி யதாக இருக்கும். அதனல் அவர்களுக்குக் கஷ்டங்களை அளிக்காமல் இருப் பதற்காக இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் லிமிட்டை சற்று உயர்த்தி 6,000 ரூபாய் வரை வைக்கவேண்டும் என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதன் மூலமாக சாதாரண விவசாயிகளுக்கும் மத்தியதர விவசாயி களுக்கும் நல்ல நிலைமை ஏற்படும் என்ற காரணத்திற்காக இப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிலத்தில் ஒரு வருஷத்தில் கிடைத்த வரு மானம் அடுத்த வருஷம் கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. அந்த முறையில் அவர்களுக்கு விதி விலக்கு இருக்கவேண்டும் என்ற அடிப்படை யில் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருப்பதால் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN: மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இப்போது பிரேரேபிக்கப்பட்ட திருத்தத்தை கனம் அமைச்சர் 10-50 a.m.

ஒரு வேளை ஒப்புக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்ற ஐயப்பாட்டினால்தான் நான் இப்போது பேச முற்படுகிறேன். வருடத்திற்கு 3,600 ரூபாய்க்கு மேல் விவசாய வருமானம் பெறுடவர்களுக்கே விவசாய வருமான வரி விதிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் இம்மசோதாவில், ஆண்டிற்கு 3,600 ரூபாய் வரையில் விவசாய நிகர வருமானம் பெறுடவர்களுக்கு இவ்வரியினின்றும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதி விலக்கு அளவை 3,600 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று பொது உடைமைக் கட்சியைச் சேர்ந்த கனம் நண்பர் திரு பழனிசாமி மிக மிக வலியுறுத்திக் கூறியிருக்கிறார். நிகர விவசாய வருமானத்தின் மீதே இவ்வரியை விதிக்க வேண்டுமென்று மசோதா கூறுவதால், இந்த விதிவிலக்கு அளவினை உயர்த்த வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன். ஒருவருக்குக் கிடைக்கும் மொத்த விவசாய வருமானத்தில், அவர் செலுத்த வேண்டிய சாதாரண வரிகளும் அவர் விவசாயத்திற்காகச் செலவழித்திருக்கும் பணமும் நீங்கலாக உள்ள தொகைதான் அவருடைய நிகர விவசாய வருமானம் ஆகும். இப்படிப்பட்ட நிகர விவசாய வருமானத்தின் மீதே இவ்வரியை விதிக்க வேண்டுமென்று மசோதா கூறுவதால், இந்த விதிவிலக்குத் தொகையை உயர்த்த வேண்டியதில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் மொழிகின்றேன். மேலும், இந்த விதிவிலக்குத் தொகையை உயர்த்தினால், இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் அதிக வருமானம் உள்ளவர்களிடமிருந்து எவ்வளவு வரி பெற வேண்டுமென்று நாம் கருதுகிறோமோ அவ்வளவு வரித் தொகையை பெற முடியாதபடி போய்விடும்; நமது லட்சிய அளவை விடக் குறைவான அளவில்தான் நமக்கு வரி கிடைக்கும். ஏனென்றால், இம்மாநிலத்தில் அதிக விவசாய வருமானமுள்ளவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. நாம் இயற்றும் சட்டம் இப்படிப்பட்ட குறைந்த எண்ணிக்கையில் உள்ள அதிக வருமானக்காரர்களிடமிருந்து அதிக வரியை வசூலிப்பதற்கு வகை செய்வதாயிருந்தால்தான், அது பயனுள்ள சட்டமாக இருக்கும். விதி விலக்குத் தொகையை 5,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கோரும் திருத்தம் எதிர்க் கட்சியிலிருந்து பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணம் காட்டி அதை ஏற்றுக்கொண்டுவிடக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கனம் அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். விதிவிலக்குத் தொகையாகிய 3,600 ரூபாயை உயர்த்தவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது ஆந்திரா ராஜ்யத்திலே 5,400 ரூபாய்க்கு உச்ச வரம்பு கட்டியிருக்கிறார்கள். உச்ச வரம்பு கட்டி வருமானத்தை நிகரமாக்கியிருக்கிறார்கள். நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதற்கு முதற்படியாக இதைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அங்கே இன்னும் விவசாய வருமானத்தின் பேரில் வருமான வரி போடவில்லை. இந்த விதிவிலக்குத் தொகை 5,400 ரூபாய்க்குக் குறைந்தால் எத்தனையோ மத்தியதர விவசாயிகள் கஷ்டப்படுவார்கள் என்று கருதித்தான் அவர்கள் அந்த வரம்பை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகையால், இதை 5,400 ரூபாயாக நிர்ணயித்தாலும் மத்தியதர விவசாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதையாரும் மறுக்க முடியாது. இப்போது இயற்றப்படும் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு அனேக குழப்பங்கள் வரப்போகின்றன. அது அமுலுக்கு வந்த பிறகு ராஜ்யத்தில் லஞ்ச ஊழலும் அதிகரிக்கும். இந்த விதிவிலக்குத் தொகையை 5,000 ரூபாயாக உயர்த்தினால்தான் மத்தியதர விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். இந்த மசோதாவில் "பீனல் க்ளாஸெஸ்" கூட கடுமையாக இருக்கின்றன. இப்போது விலைவாசிகள் மிகவும் ஏறிவிட்டன. இவைகளையெல்லாம் பார்க்கும்போது, இந்த விதி விலக்குத் தொகையை 5,000 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம் என்று தோன்றுகிறது. எனவே, இந்தத் திருத்தத்தைக் கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

20th September 1958]

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா முதலில் சபையில் பிரேரேபிக்கப்பட்டபோது இதில் இருந்த நிபந்தனைகளுக்கும் இப்போது இதில் இருக்கும் நிபந்தனைகளுக்கும் அதிக வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த விதி விலக்கு வரம்பு 1,500 என்றுதான் முதலில் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை, பொறுக்குக் கமிட்டியில் தீர ஆராய்ந்த பிறகு, 3,600 ரூபாயாக மாற்றுவது நியாயம் என்று ஒத்துக்கொண்டோம். இந்த 3,600 ரூபாய் நிகர வருமானம் (நெட் இன்கம்) ஆகும். இப்போது வருமான வரியை எடுத்துக்கொண்டால், 3,600 ரூபாய்க்கு மேல் வருட வருமானம் பெறுபவர்கள் வருமான வரி கட்டவேண்டும். விவசாய வருமானத்திற்கும் அந்த அடிப்படையிலேயே வரி போடுவது நியாயம் என்று நான் நினைக்கிறேன். விதிவிலக்கு வரம்பை 5,000 ரூபாயாக மாற்றுவது சரியில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I want to have a clarification from the Hon. Minister. Is it the net income of the gross income?

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, அது நிகர வருமானம் (Net income) தான். பொறுக்குக் கமிட்டியில், தீர ஆராய்ந்த பிறகு அது நிகர வருமானமாகத்தான் இருக்க வேண்டுமென்று ஒத்துக்கொண்டோம். ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் எதிர்பார்ப்பது ரொம்ப அதிகம் என்று சொல்லப்பட்டது. ஆனால், நாங்கள் விசாரித்ததில், ஒரு ஏக்கருக்கு 700 ரூபாய் அல்லது 800 ரூபாய் அல்லது 1,000 ரூபாய்கூட வருமானம் வரும் என்று தெரிந்துகொண்டோம். சில இடங்களில் ஏக்கருக்கு 300 ரூபாய்க்கும் குறைவாக வருமானம் வருகிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், சராசரியாக, ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் வருமானம் வரும் என்ற முடிவிற்கு வந்தோம். அதை ஒத்துக்கொண்டோம். இதை மிகத் துல்லியமாக—தராசில் வைத்து நிறுப்பது போல்—நிர்ணயிக்க முடியாது. இப்போது நிர்ணயித்திருப்பது சரியானது. விதி விலக்கு வரம்பாகிய 3,600 ரூபாய் சரியான வரம்பு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ அன்பழகனும் சொன்னார்.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். விவாதம் நடக்க நடக்க, கனம் அங்கத்தினர்கள் சர்க்காரின் கஷ்டத்தையும் தங்களுடைய பொறுப்பையும் உணருகிறார்கள். வரி போட்டால்தான் சர்க்கார் நடக்க முடியும் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருகிறார்கள். பணம் இருந்தால் தான் அரசாங்கம் நடக்க முடியும். இந்த மசோதாவில் நிர்ணயிக்கப் பட்டுள்ள வரி விகிதங்கள் சரியானவை என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

In clause 30 of the Bill, *for* the proviso to Part I of the Schedule, *substitute* the following proviso, namely :—

'Provided that in the case of every company, agricultural income-tax shall be charged at the maximum rate on the whole of the total agricultural income'.

The amendment was put and carried.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The amendment of Sri K. Ramachandran relating to Part I of the Schedule was put and lost.

The amendment of Sri K. Ramachandran relating to Part II of the Schedule was, by leave, withdrawn.

Clause 30, as amended, was put and carried.

Clauses 31 to 33 were put and carried.

Clause 34.

MR. SPEAKER : The motion is—

"That clause 34 do stand part of the Bill."

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"*After* sub-clause (2) of clause 34, *add* the following new sub-clause :—

'(3) The provisions of sections 35 and 36 of the Principal Act shall, so far as may be, apply in relation to the composition of agricultural income-tax under this section, as they apply in relation to the assessment of agricultural income-tax under the Principal Act'."

For the same reasons I mentioned previously, I have moved this amendment. I request the House to accept it.

Sir, I also move—

To sub-clause (1) of clause 34, *add* the following proviso, namely :—

'Provided that in the case of every company, the lump sum so payable shall be charged at the maximum rate on the whole of the total extent of the land held by that person'.

This amendment is similar to the one moved already.

The amendments were put and carried.

Clause 34, as amended, was put and carried.

Clause 1.

MR. SPEAKER : The motion is—

That clause 1 do stand part of the Bill.

SRI S. LAZAR : I want a small clarification, Sir. I would like to bring to the notice of the House that the Hon. Minister was saying the other day that the Government did not intend to apply this Amendment Act to the Kanyakumari district. The Act as it is to-day says that it shall extend to the whole State of Madras. In the absence of a clause which says when the Amendment Act will actually come into force under the General Clauses Act, it is deemed to have come into effect immediately after assent to it is given. Immediately after assent is given to this Amendment Act, it will have to be applied to the entire State including the

20th September 1958] [Sri S. Lazar]

Kanyakumari district. But the Hon. Minister said that the Government did not intend to apply this Act to the Kanyakumari district, because that district had its own Act. I would like to know the correct position.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, we are amending the **Parent Act, namely,** the Madras Plantation Agricultural Income-tax Act, 1955. Since we are now amending this Act, the Amendment Act will apply only to that State as it originally stood without the Kanyakumari district. So this Amendment Act would not apply to the Kanyakumari district.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958) as amended be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958) as amended be passed."

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, இந்த 11-00 a.m.
விவசாய வருமான வரித் திருத்த மசோதா சட்டம் ஆகும்படியான இந்தத் தருவாயில், இதைக் கொண்டுவந்து மிகவும் சிறந்த முறையில் பரிசீலனை செய்து, செலக்ட் கமிட்டிக்கு விட்டு, மக்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து நல்ல முறையில் கொண்டு வந்ததற்காக நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். நான் ஒரு விவசாயி. முதன் முதலில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவுடனே ஆதரித்தவன். நான் நேரடியாகப் பார்த்து விவசாயம் செய்யக்கூடியவன். அதனால்தான் நான் இதை ஆதரித்தேன். யாரோ சொல்லிப் பேசுவதாக இருந்தால் நான் இதை ஆதரிக்க மாட்டேன். சில நண்பர்கள் சொன்னார்கள், ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும், அதற்காகக் கீழ் வாரம்பை அதிகப்படுத்த வேண்டும் என்று. இதிலே சில முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள். முதன் முதலாக இந்த மசோதா தயாரிக்கப்பட்ட நேரத்தில் எல்லா வருமானத்தையும் சேர்த்து கணக்குப் போட்டு வருமான வரி என்றிருந்தது. இரண்டாவது ஒவ்வொருவரும் கணக்கு வைத்துக் காட்ட வேண்டும் என்று முதன் முதலில் பிரசுரித்திருந்தார்கள். பல இடங்களில் விவசாயப் பொது மக்கள் நலனை உத்தேசித்து அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அமைச்சர் அவர்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரிவித்ததால், பொறுக்குக் கமிட்டியில் அவைகளைப் பரிசீலனை செய்து நல்ல முறையில் இந்த மசோதா திருத்தப்பட்டிருக்கிறது. இந்த மசோதா வந்தபிறகு உணவு உற்பத்தி குறைந்து விடும் என்று சிலர் கூறினார்கள். இந்த மசோதாவினால் உணவு உற்பத்தி குறையாது, ஆனால் அதிகப்படியாக ஏது இருக்கிறது. ஏனென்றால் இந்த வரி வருமான அடிப்படையில் இல்லாமல், விஸ்தீர்ணத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டரை ஏக்கருக்கு வரி கிடையாது. இந்த 12½ ஏக்கர் என்பது நல்ல அயன் நஞ்சை. எட்டு ரூபாயும், அதற்கு மேலும் கந்தாயமுள்ள பூமி. அதிலிருந்து எத்தனை வரும்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். குடியானவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்க கவனமாக

ஈடுபட்டு, எவ்வளவு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அவ்வளவு பெருக்கி அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை எடுத்துக் கொண்டால் அதிலே சர்க்கார் தலையிடாது. இது முதல் தர பூமிக்கு. இரண்டாம் தரம், தோட்டக்கால் பூமியாக இருந்தால் 20 எக்கர். மூன்றும் தரமான மானாவாரியாக இருந்தால் 35 எக்கர். இந்த 35 எக்கருக்கு மேலுள்ளவர்கள் 100-க்கு 10 பேர்களுக்கு மேல் சென்னை மாகாணத்தில் கிடையாது. இதனுல் யார் பாதிக்கப்படுகிறுர்கள், யார் வரி கொடுக்கப் போகிறுர்கள் என்று பார்த்தால், சர்க்காருக்கு இந்த வரியினுல் அதிகப்படியான வருவாயை எதிர்ப்பார்ப்பதை விட நிலச்சீர்த்திருத்தம் வேண்டுமென்று சொல்லுகிற காங்கிரஸ் கட்சியினுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, வருமானம் அதிகம் வேண்டுமென்ற நோக்கமல்ல என்பதை இந்தச் சபை உணரவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, இதிலே சாதாரண விவசாயிகள் கணக்கு வைத்துக் கொண்டு அதிகாரிகளுக்குக் காட்டி கஷ்டப்படும்படியில்லாத ஒரு நிலையை சர்க்கார் ஏற்படுத்திக் கொடுத்ததை நான் பாராட்டுகிறேன். வேறு வருமானங்களைச் சேர்க்காமல், விவசாயத்தில் வரக்கூடிய வருமானத்தை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று செய்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். அதோடு மட்டுமல்ல. வருமானம் என்றுல் எது என்று பூரா விவசாயிகளுக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. வருமானம் என்றுல் நிகர வருமானமா, மொத்த வருமானமா, அல்லது செலவு நீக்கிய வருமானமா என்று புரியாமல் எல்லோருக்கும் பயம் இருந்தது. இன்கம்-டாக்ஸ் என்றுல் செலவு நீக்கியுள்ள வருமானம்தான் வருமானம். ஒரு எக்கர் நஞ்சையை எடுத்துக்கொண்டால் உற்பத்திக்கு ஆகக்கூடிய செலவு ரூ. 250. அதிலிருந்து வரக்கூடிய வருவாய் ரூ. 400. இதற்கு அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸ் ஆக்ட் பிரகாரம் வருமானம் ரூ. 150, ரூ. 100, ரூ. 150-க்கு மேல் போகாது. அது மட்டுமல்ல. தொழிலாளர்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்தான் ஏழைப்பங்காளன் என்று சொல்லிக் கொண்டு ரூ. 3,600 என்று இருப்பதை ரூ. 5,000 ஆக மாற்றவேண்டுமென்று சொன்னுர்கள். இதிலிருந்து பணக்காரர்களை ஆதரிப்பது கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களா அல்லது காங்கிரஸ்காரர்களா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த விவசாய வருமான வரிச் சட்டத்தினுல், அநேகமாகக் கணக்கு வைத்துக்கொடுக்கக் கூடியவர்கள் ஆயிரம் பேர்கள்கூட இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவ்வளவு தூரம் இருக்கக் கூடியவர்கள் கணக்கு இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. அநேக விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கூடிய முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தசரதன் எப்படி மக்களை ஆண்டு கொண்டிருந்தான் என்பதைப் பற்றிக் கம்பன் கூறியதைச் சொல்லாமல் இருக்க முடியாது. வெகு அற்புதமாகச் சொல்லி இருக்கிறுர். தசரதன் எப்படி ஆண்டான் என்றுல், ஒரு சிறு நில விவசாயி தன் பூமியை எப்படி காத்துக் கொண்டிருப்பானே, அது மாதிரி மக்களைக் காத்துக் கொண்டு வந்தான், அப்படி ராம ராஜ்யமாக ஆண்டு வந்தான் . . .

Sri P. U. SHANMUGAM : ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் . . . .

Mr. SPEAKER : இப்போது பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்க முடியாது.

Sri P. U. SHANMUGAM : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது பேசுகின்ற அங்கத்தினர், தசரதன் ராம ராஜ்யத்தை ஆண்டான் என்று புராணத்தைத் தலைகீழாகச் சொல்லுகின்றுரே, அப்படிச் சொல்லலாமா ?

20th September 1958]

SRI P. G. KARUTHIRUMAN : புராணத்தைப் பற்றித் தெரியாதவர்கள் இதிலே தலையிடுவது நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன். ராமன் ஆண்டால்தான் ராம ராஜ்யம் என்பது அல்ல. ராம ராஜ்யம் என்பது ஒரு கன்ஸெப்ஷன். ராம ராஜ்யம் தசரதனுக்கு முன்னாலே எப்படி இருக்க முடியும் என்று கேட்பது சரியல்ல.

MR. SPEAKER : தயவு செய்து விவாதத்தைப் பெருக்க வேண்டியதில்லை. உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளலாம்.

SRI P. G. KARUTHIRUMAN : "மிலினியம்" என்று சொல்லுகிறார்கள். கிருஸ்து பிறப்பதற்கு முன்னால் இத்தனை ஆண்டு என்று சொல்லும்போது, கிருஸ்து இந்த ஆண்டுதான் பிறப்பார் என்று முன் கூட்டியே சொல்ல முடியுமா என்று கேட்பது போல இருக்கிறது கனம் அங்கத்தினர் கூறுவது. ராமன் தான் ஆள வேண்டும், ராமன் ஆண்டால்தான் ராம ராஜ்யம் என்பது கிடையாது. இதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

MR. SPEAKER : The hon. member need not put forward that argument. இன்னும் நேரம் இருக்கிறது என்பதற்காக ராமாயணத்தைப் பற்றி பேச வேண்டியதில்லை.

SRI P. G. KARUTHIRUMAN : இதற்கும் விவாதத்திற்கும் சம்பந்தமிருக்கிறது. ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக, எல்லா மக்களும் நன்கு வாழவேண்டுமென்பதற்காக, சிறு விவசாயிகளுக்கு ஊக்கத்தைக் கொடுப்பதற்காக, சோம்பேரித்தனமாக கவனிக்கப்படாமல் இருக்கும்படியான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம் இந்தச் சட்டம். ராம ராஜ்யத்தை அமைக்க வேண்டும், சமதர்ம பாணியில் சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த முக்கியமான சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு பாட்டைச் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன்.

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற வல்லாரு மில்லை
அவைவல்லர் அல்லாரும் இல்லை எல்லாரும் எல்லாப்பெருஞ்
செல்வமும் எய்த லாலே இல்லாரும் இல்லைஉடையர்
களும் இல்லை மாதோ.

ராம ராஜ்யம் ஏற்படுவதற்கு இந்தச் சட்டம் ஒரு முக்கியமான நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய வருமான வரிச் சட்டம் நிறைவேறக்கூடிய தருணத்திலே ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 11–10 a.m. இந்த மசோதாவைக் கொண்டுவந்து விட்டதால், பிரமாதமான சீர்திருத்தத்தை கொண்டுவந்து விட்டோம் என்று சர்க்கார் நினைத்துவிடக்கூடாது. மந்திரி அவர்கள் ஏற்கனவே உறுதி சொன்னதுபோல, 'லாண்டு ரெவின்யூ' இப்பொழுது இருக்கிற முறையிலே ஒரு கஷ்டமான வரியாக இருந்து கொண்டிருக்கிறது. மிகவும் "காம்ளிகேட்டாக" இருக்கிறது. அதைக் கூடிய வரையில் "பேஸிக் டாக்ஸ்ஸாக" மாற்றுவதற்கான நடவடிக்கையை சீக்கிரத்திலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரொம்ப நாட்களாக ஏதோ காரணங்களை ஒட்டி தள்ளிவைக்கப்பட்டு வரும் உச்ச வரம்புச் சட்டத்தை, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, ஓரிரண்டு வருஷத்திற்குத் தள்ளிவைக்கக்கூடாது. கூடியவரையில், வருகின்ற சட்டசபை கூட்டத் தொடரிலோ, அல்லது எவ்வளவு விரைவில் கொண்டுவரமுடியுமோ அவ்வளவு விரைவில் உச்ச வரம்புச் சட்டத்தை கொண்டுவரவேண்டுமென்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri K. Ramachandran] [20th September 1958

சட்டத்தினுடைய ''ப்ரொவிஷன்களைப்'' பொறுத்த வரையில், ''$12\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு'' ஏகராவுக்கு, ரூபாய் 3,600–க்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவதில் நான் பூரண திருப்தி அடையாவிட்டாலும் அது இப்பொழுது நிறைவேறவேண்டிய தருணத்திலே இருக்கிறது. இதிலே நான் பெரிய பண்ணை, சிறிய பண்ணை என்ற காரணத்தை வைத்துச் சொல்லவில்லை. பொதுவாக, சாதாரண விவசாயிகள், மத்தியதர வர்க்கத்தில் உள்ள விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அதனால் கிராமத்திலுள்ள ''ரூரல் கிரெடிட் பெஸிலிடீஸ்'' பாதிக்கப்படும். விவசாய பொருளாதாரமே பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இதன் காரணமாகத்தான் இந்த விதிவிலக்கு வரம்பை சற்று உயர்த்தவேண்டுமென்று நாங்கள் திருத்தங்கள் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தத் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்பொழுது இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்படக்கூடிய தருணத்தில் இருக்கிறது. கூடியவரையில் ''ரூல் மேகிங் பவர்ஸை'' உபயோகித்து சர்க்கார் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் காலத்தில், விவசாயிகள் அதிகமாக பாதிக்கக்கூடாத நிலையில் கணக்கு கொடுக்கவேண்டியதை பொறுத்தவரையில், நல்ல முறையில் விதிகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக ''பீனல் புரோவிஷன்ஸைப்'' பொறுத்தவரையிலே அஸெஸ்மெண்டு அளவுக்கு அபராதம் விதிக்கலாம் என்பதை எடுத்தது பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அதே சமயத்தில் செக்ஷன் 16–ஐ பொறுத்தவரையில், ''ரிடர்ன்'' கொடுக்காததற்குக்கூட அபராதம் விதிக்கலாம் என்றெல்லாம் இருக்கிறது. இம்மாதிரி புதுச் சட்டங்களை கொண்டு வரும்போழுது, சாதாரண விவசாயிகள் ''ரிடர்ன்'' போடுவது, கொள்ளுவது எல்லாம் செய்யமுடியாத நிலைமை இருப்பதால், இந்த ''புரொவிஷன்ஸை'' உடனடியாக உபயோகப்படுத்தாதபடி விதிகளை அமைக்க வேண்டும். கூடியவரையிலும் பல பாதுகாப்புக்குப் பின்னால்தான் இந்தப் பிரிவுகளை அனுஷ்டிக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டத்திற்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்கப்படுகிறது. ஒரு வருஷத்திற்கு முந்தியே 1—4—1958–லிருந்து இது அமுலுக்கு வரும் நிலைமையில் இருக்கிறது. ஆகையினால் இதற்கு முன்காலத்தைப் பொறுத்தவரையிலும் கணக்குகள் அதிகமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்திருக்கலாம். அதையெல்லாம் மிகவும் வற்புறுத்தக்கூடாது. இதனால் அதிகாரிகள் கெடுபிடியாக விவசாயிகளைத் துன்புறுத்தமுடியாத நிலைமையில் 'ரூல் மேகிங் பவர்ஸின்' கீழ் சரியான விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் ஏற்கனவே சொன்னபோதுபோல, இதை ஒரு பெரிய விவசாயச் சீர்திருத்தம் என்று கருதிக்கொண்டிராமல், மற்ற சீர்திருத்தங்களை உடனடியாகக்கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சட்டத்தினால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கக்கூடாத வகையிலே 'ரூல் மேகிங் பவர்ஸை' உபயோகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER—*cont.*

(2) AMENDMENTS TO THE MADRAS PANCHAYATS BILL.

MR. SPEAKER: I have to make an announcement. For four days from Monday, the 22nd September, the House will discuss the Madras Panchayats Bill. I had originally fixed yesterday, the 19th September, as the last day for the receipt of amendments. But, at the request of several hon. Members, I have extended the time for the receipt of amendments to this Bill till 5 o'clock this evening. So, all amendments received up to 5 o'clock this evening will be considered.

20th September 1958]

SRI T. SAMPATH : Sir, I request that the time may be extended till tomorrow.

MR. SPEAKER : The House is likely to adjourn by 1 p.m. to-day. So, the hon. Members will have 4 clear hours for sending their amendments.

SRI T. SAMPATH : Sir, I am requesting further extension for the reason that the Bill contains over 200 clauses and we have to carefully study them before giving notice of amendments.

MR. SPEAKER : The hon. Member presumably forgets the fact that the Bill has been with him for 15 days.

SRI T. SAMPATH : But, we were engaged with the other Bills.

MR. SPEAKER : I have already extended the time till 5 o'clock this evening. There is a limit to everything.

SRI T. SAMPATH : It is only a request to you, Sir.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 16 OF 1958)—*cont.*

SRI A. S. SAHAJANANDA: கனம் தலைவர் அவர்களே, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குச் சலுகை காட்டப்போகிறார்கள் என்று ஏற்கனவே ஆங்காங்கு பெரிய நிலச்சுவான்தார்கள் மனைவி, குழந்தைகள், மருமகள், இவர்கள் பேரில் நிலங்களை பிரித்துவிட்டார்கள். இப்போது விவசாய வருமான வரி குறைந்த அளவு நிலம் உள்ளவர்களுக்கு இல்லையென்றால், அதேமாதிரிதான் நிலங்களை பிரித்துவிடுவார்கள். அதனால் சர்க்காருக்கு வரக்கூடிய வருமானம் குறையும். சர்க்கார் வேறு இல்லை, ஜனங்கள் வேறு இல்லை. சிறு நிலச்சுவான்தார்களும், பெரிய நிலச்சுவான்தார்களும் எல்லோரும் வரி கொடுப்பதுதான் நியாயமாகும்.

இப்பொழுது அமுலில் இருக்கும் நியாயவாரச் சட்டம் ஒழுங்காக நடைபெறவில்லை. எங்கும் மிராசுதார்கள் இந்தச் சட்டத்தின்படி நடக்கவில்லை. யாரோ ஒருவர், இருவர் இந்தச் சட்டத்தை மதித்து அதன்படி நடக்கிறார்கள். காங்கிரஸ் மிராசுதார்கள்கூட இந்தச் சட்டத்தின்படி ஒழுங்காக நடக்கவில்லை. இந்த நிலையிலே ஜனங்களும் ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை. 60 வாரம் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் சட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் மிராசுதார்கள் 30 வாரம்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் கையில் 60 வாரம் கொடுத்ததாக எழுதி வாங்கிக்கொள்ளுகிறார்கள். அதிகமாகக் கேட்டால் நிலத்தை கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ரூபாய் 200, 300-க்கு பிராமிஸரி நோட்டு எழுதி வாங்குகிறார்கள். அதிகமாகக் கேட்டால் இந்தப் பணத்தை வசூல் செய்கிறார்கள். அதேமாதிரி சில இடங்களில் ஜனங்களும்கூட நிலத்தை வாங்கிக்கொண்டு வாரம் கொடுப்பதே இல்லை. அறுத்து எடுத்துக்கொண்டே போகிறார்கள். கேள்வி முறை கிடையாது. இந்தச் சட்டங்கள் வந்த பிறகு நாட்டில் உணவுப் பிரச்னை மோசமாக இருக்கிறது. விளைபொருள்கள் சரியாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. கூலி ஆள்களும் தாங்கள் வாங்குகிற கூலிக்கு ஏற்றவாறு வேலை செய்யவில்லை. புதிய சட்டங்கள் பலவற்றை போடுவதை விட, இருக்கிற சட்டங்களை ஒழுங்காக அமுல் நடத்துவது மிகவும் முக்கியமாகும். அதனால் இந்தத் திருத்த மசோதா வேண்டியதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

[20th September 1958

APPENDIX I.

[Vide answer to starred question No. 355 asked by Sri M. C. Muthukumaraswamy at the meeting of the Legislative Assembly held on 20th September 1958, page 337 supra]

(*a*) Number of High Schools in Tanjore district—

Management. (1)	*Boys.* (2)	*Girls.* (3)	*Total.* (4)
Government	..	2	2
Municipal	3	1	4
District Board	25	1	26
Aided	34	7	41
Unaided	..	..	..
	62	11	73

(*b*) Names of schools and percentage of eligible candidates of S.S.L.C. Public Examinations of March 1956 and March 1957—

	Percentage of eligible students.	
	March 1956.	*March* 1957.
L.M.C., High School, Sirkali	44	50
S.M. Hindu High School, Sirkali	53	65
The Municipal High School, Mayuram	73	78
The National High School, Mayuram	94	99
The Municipal High School, Kornad	44	47
Government Girls' High School, Mayuram	68	51
Board High School, Muthupet	32	29
Board High School, Kuttalam	31	40
The National High School, Nagore	64	65
The National High School, Nagapattinam	49	60
The Church of South India High School, Nagapattinam.	75	72
The Municipal Girls' High School, Nagapattinam	50	50
Board High School, Nannilam	36	56
The Nadar's High School, Porayar	27	50
Board High School, Tiruturaipundi	36	53
Board High School, Vedaranyam	23	20
Board High School, Tiruvarur	30	74
Board High School, Kodavasal	49	61
Board High School, Kordacheri	16	33
The George High School, Vishnupuram	79	90
Board High School, Koothanallur	12	66
The National High School, Mannargudi	59	66
The Findlay High School, Mannargudi	94	92
St. Josephs' Girls' High School, Mannargudi	81	53
Board High School, Manalmedu	28	53
Board High School, Keelaperumpallam	25	40
The Venkatesa High School, Ayangudipallam, Anaikkaranchatram Post.	34	44

20th September 1958]

	Percentage of eligible students.	
	March 1956.	*March* 1957.
Board High School, Kivalur	54	68
Board High School, Peralam	40	60
Board High School, Ayakkarambalam	35	55
T.E.L.C. High School, Tranquebar, Mayuram taluk.	43	43
Aided High School, Sembanarkoil	..	
The T.A. High School, Tiruvadamarudur	41	37
The Town High School, Kumbakonam	60	77
The Native High School, Kumbakonam	67	77
The Banadurai High School, Kumbakonam	54	71
The Little Flower High School, Kumbakonam	52	58
Municipal High School, Kumbakonam	38	44
Government Girls' High School, Kumbakonam	64	48
St. Joseph Girls' High School, Kumbakonam	63	90
The Seethalakshmi Girls' High School, Kumbakonam.	69	56
Victoria Board High School, Papanasam	28	41
Board High School, Ayyampet	51	51
Board High School, Ammapet	39	36
The Kassimia High School, Rajagiri	55	26
Board High School, Rajamadam	34	50
The Kalyanasundaram High School, Tanjore	35	51
St. Peter's High School, Tanjore	60	53
St. Antony's High School, Tanjore	60	62
The Viraraghava High School, Tanjore	33	72
The Girls' Christian High School, Tanjore	87	87
The Sacred Heart Girls' High School, Tanjore	95	91
Board High School, Orathanad	26	38
Srinivasa Rao High School, Thiruvaiyaru	39	51
P.S.S. High School, Tirukkattupalli	37	52
Board High School for Boys, Pattukottai	30	54
Board High School for Girls, Pattukottai	45	33
Board High School, Arantangi	61	74
Board High School, Nachiarkoil, Kumbakonam R.S.	35	64
Board High School, Valangaiman	40	85
Board High School, Vallam	44	25
T.A.A.D.U. High School, Karunthattankudi	18	75
Khadir Mohideen High School, Adirampattinam	33	38
Kumara Gurupara Swamigal High School, Aduthurai.	33	32
Ranganatha Mudaliar Girls' High School, Tiruvarur.	..	86

(*c*) and (*d*) No special reasons can be given for the poor performances of some of the schools which secured low percentage of eligible candidates. The managements of local bodies and private secondary schools which scored less than 30 per cent were requested to take necessary action against the persons responsible for poor results. No Government school in this district scored less than 30 per cent in the S.S.L.C. Public Examination of March 1956 and March 1957.

[20th September 1958

APPENDIX II.

[Vide answer to starred question No, 363 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 20th September 1958, page 342 supra.]

[SUBJECT—*Details of the amount spent on Rural water-supply comprehencive Scheme from* 1st *October* 1957 *upto* 31*st March* 1958 *district wise.*]

District.	Amount spent from 1st October 1957 to 31st March 1958.
(1)	(2)
	RS.
Chingleput	1,09,806
North Arcot	2,50,388
South Arcot	1,81,241
Tanjore	1,78,719
Tiruchirappalli	3,50,445
Madurai	53,265
Ramanathapuram	2,48,955
Tirunelveli	6,17,343
Salem	2,48,494
Coimbatore	2,82,789
The Nilgiris	71,138
Kanyakumari	79,338
Total ..	26,71,921

APPENDIX III

[Vide answer to clause (*b*) to starred question No. 368 asked by Sri M. Jagannathan at the meeting of the Legislative Assembly held on 20th September 1958, page 346 supra.]

Recommendations of the Committee.	*Action taken by the Government.*
(1)	(2)
1. That the Government Milk Factory should work on the modified lines suggested as follows :—	
(*a*) that the factory should be under the control of the Government and must manufacture and supply toned milk;	1. (*a*) the Government have decided to run the Milk Factory under their control. The factory switched over to the production and distribution of toned milk from 1st July 1955.
(*b*) that its machinery must be improved and some of the machinery which is now not in proper working order should be replaced by new and improved equipment ;	(*b*) the Government have sanctioned the purchase of necessary new machineries for the Government Milk Factory.
(*c*) that better laboratory facilities on the premises should be available for the daily check of the quality of toned milk;	(*c*) Better laboratory facilities have been made available.

20th September 1958)

Recommendations of the Committee. (1)	*Action taken by the Government.* (2)
(*d*) that the employees should be properly instructed in regard to the sterilization of vessels and the process of bottling milk ; (*e*) that the cans should be of such a nature that they can be automatically sealed by the machinery;	(*d*) and (*e*) Necessary instructions have been issued.
(*f*) that for distribution, insulated motor vans should be made available ; and	(*f*) Two insulated vans have been purchased and they are in use.
(*g*) that the Government Milk Factory should also be the Store House for the skimmed milk powder which is proposed to be brought under the control of Government and all indents of consumers for milk powder should be supplied through the Government Milk Factory.	(*g*) The Government have decided that as the Committee was not in favour of compelling coffee hotels and other establishments to use skimmed milk powder, there need be no Government monopoly over the sale of milk powder which should be made freely available to the public.
2. (*a*) that a Milk Commissioner should be immediately appointed who will be responsible for the inspection of all centres where milk is brought from different centres, stored and distributed and enforce quality standards; for the inspection along with the Health Officer of the Corporation of all cattle sheds in the City and as per special legislation to be passed; for enforcing removal of such cattle from congested areas to the Milk Farms suggested elsewhere ; (*b*) that the Milk Commissioner should work in close co-operation with the Corporation and with the Co-operative Department, the Animal Husbandry Department and the Co-operative Societies established for milk supply and distribution.	2 (*a*) & (*b*) The Government have apppointed a Special Officer for milk and a Special Officer for Dairy and Milk Project to work under the control of the Director of Animal Husbandry. The said Officers are working in co-ordination with the Corporation of Madras and the Co-operative Department and are attending to work relating to formation of cattle colony at Madhavaram, Madras, and other allied subjects connected with the Scheme. The question of appointment of a Milk Commissioner will be taken up at a later stage.
3. That the Ayanavaram Milk Supply Union should continue to function on the following lines:— (*a*) that it must collect milk as at present but should arrange for transport through insulated motor vans ; (*b*) that as far as possible the mufassal centres where milk is collected should have proper facilities afforded for the cattle and for milking of the cattle in the presence of responsible persons ; (*c*) that the milk brought to the Ayanavaram Union from the different sources should be labelled and should be tested before such milk is pasteurised ; (*d*) that as in the Government Milk Factory, the milk cans must be properly cleaned and sterilised and sealed automatically before they are sent out for distribution ; (*e*) that the present method of utilising the cans with taps for retail distribution should be discontinued ; (*f*) that the staff should be properly trained in the process connected with the storage pasteurising and bottling or canning of milk ; (*g*) that as far as possible provision should be made in Ayanavaram for proper cattle-sheds and for pasture land where the cattle could graze.	In pursuance of these recommendations a scheme, viz., "Hygienic handling of milk by Madras Co-operative Milk Supply Union" has been introduced in the Second Five-Year Plan.

[20th September 1958

Recommendation of the Committee (1)	Action taken by the Government. (2)
4. That milkmen's colonies should be established in the outskirts of Madras City.	4. The Government have accepted in principle the need for the establishment of cattle colonies in the outskirts of the Madras City. To begin with the Government have sanctioned the establishment of a cattle colony at Madhavaram near Madras on an 600-acre plot for accommodating 4,000 milch animals during the Second Five-Year Plan period. Orders for the construction of necessary buildings for accommodating the first unit of 500 milch animals have already been issued and work has commenced.
5. (a) For the reasons stated in the report the Committee is not in favour of restricting coffee hotels and other establishments to use skimmed milk powder only ; (b) that the proprietors of coffee hotels however may be compelled to purchase milk only through one of these organised societies under conditions which would ensure proper care being taken in the supply of wholesome and clean milk.	5. (a) and (b) The Government have ordered that there need be no compulsion on hotels and that it may be left to hotel-keepers to use any milk they like in the hotels.

Appendix IV.

[Vide answer to starred question No. 384 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 20th September 1958, page 358 supra].

(a) *Statement showing the number of Veterinary Hospitals, Veterinary Dispensaries, etc., in each of the taluks in the Coimbatore district.*

Taluk. (1)	*Number of Veterinary Hospitals.* (2)	*Number of Veterinary Dispensaries.* (3)	*Number of Minor Veterinary Dispensaries.* (4)	*Number of Touring Billets.* (5)	*Number of First Aid Centres.* (6)	*Total number of Veterinary Institutions in each taluk.* (7)
Coimbatore ..	1	1	1	..	..	3
Pollachi ..	2	2	..	1	..	5
Avanashi ..	..	2	1	..	1	4
Udumalpet ..	1	1	3	..	1	6
Erode ..	1	1	2	..	3	7
Palladam ..	1	1	1	..	..	3
Dharapuram ..	1	1	1	..	..	3
Gobichetti-palayam.	..	3	1	..	3	7
Bhavani ..	..	2	..	..	..	2
Total ..	7	14	10	1	8	40

20th September 1958]

(b) *Statement showing the number of cases treated and number of castrations made in each of the hospitals in the Coimbatore district.*

Taluk.	Name of the institution and its location.		Number of cases treated.	Number of castrations done.
(1)	(2)		(3)	(4)
1 Coimbatore ..	Veterinary Hospital,	Coimbatore	10,284	313
2 Udumalpet	Do.	Udumalpet	3,557	487
3 Pollachi	Do.	Vettaikaranpudur ..	8,557	1,079
4 Pollachi	Do.	Pollachi	3,766	572
5 Erode	Do.	Erode	3,917	478
6 Palladam	Do.	Tiruppur	3,130	396
7 Dharapuram ..	Do.	Dharapuram	2,355	934
8 Avinashi	Veterinary Dispensary,	Annur	2,511	431
9 Coimbatore ..	Do.	Singanallur	1,200	152
10 Pollachi	Do.	Vellamalai	650	..
11 Avinashi	Do.	Mettupalayam ..	2,105	236
12 Pollachi	Do.	Malayandipatnam ..	2,376	292
13 Udumalpet ..	Do.	Ramachandrapuram.	2,999	259
14 Gobichettipalayam.	Veterinary Hospital,	Gobichettipalayam ..	2,607	607
15 Gobichettipalayam.	Do.	Bungalopudur ..	2,202	184
16 Bhavani	Do.	Bhavani	687	116
17 Bhavani	Do.	Kavandapadi ..	1,598	267
18 Gobichettipalayam.	Do.	Sathiamangalam ..	1,135	410
19 Palladam	Do.	Malayampalayam ..	1,517	247
20 Erode	Do.	Chennimalai ..	937	209
21 Dharapuram ..	Do.	Nathakadayur ..	878	265
		Total ..	58,968	7,934

Taluk.	Name of the institution and its location.		Number of cases treated.	Number of castrations done.
1 Avinashi	Minor Veterinary Dispensary,	Avanashi ..	2,316	411
2 Udumalpet	Do.	Kurichikottai ..	1,500	512
3 Coimbatore ..	Do.	Periawaicka-palayam.	1,233	498
4 Udumalpet ..	Do.	Negamam ..	1,007	206
5 Erode	Do.	Perundurai ..	969	167
6 Erode	Do.	Kodumudi ..	637	157
7 Udumalpet	Do.	Andhiyur ..	452	82
8 Dharapuram ..	Do.	Kangayam ..	872	153
9 Palladam	Do.	Palladam ..	1,555	512
10 Gobichettipalayam.	Do.	Punjaipuliampatti	948	342
11 Pollachi	Touring Veterinary Kinathukadav.	Assistant Surgeon,	Nil.	Nil.*
		Total ..	11,489	3,040

(b) *Statement showing the number of cases treated and number of castrations made in each of the hospitals in the Coimbatore district*—cont.

	Taluk.	*Name of the institution and its location.*		*Number of cases treated.*	*Number of castrations done.*
	(1)	(2)		(3)	(4)
1	Udumalpet	First Aid Centre,	Erisinampatty	237	119
2	Avanashi	Do.	Thandakaranyampalayam.	23	..
3	Erode	Do.	Arachalur	524	87
4	Erode	Do.	Modakurichi	505	288
5	Erode	Do.	Ekkattampalayam	296	85
6	Gobichettipalayam.	Do.	Kurumandur	290	107
7	Gobichettipalayam.	Do.	Siruvallur	1,114	221
8	Gobichettipalayam.	Do.	Mettupalayam	595	182
			Total ..	3,584	1,089

* This was kept closed during the year 1957.